பக்கங்கள்: ஆறு

Registered as a Newspaper

# உதயன்

உண்மை - அஞ்சாமை - நடு நிலைமை

விலை ரூ. 1-50

தங்க நகைகளை கூடிய விலையில் விற்க நீங்கள் நாடவேண்டிய சிறந்த ஸ்தாபனம்!
நியூ ஈழம் ஜுவல்லரி மாட்
இல. 423 (247)
கே. கே. எஸ் வீதி,
சிவன் கோவிலடி,
யாழ்ப்பாணம்.
உரிமையாளர்:
இராஜகோபால் சந்திரன்

தங்க நகைகளை கூடிய விலையில் விற்க நீங்கள் நாட வேண்டிய சிறந்த ஸ்தாபனம்
New Eelam Jewellery Mart
No.423,(247)K K S Road,
Sivan Koviladdy, Jaffna.
(சண்முகம் சேனீர்ச் சாலைக்கு அருகாமையில்)
Prop: RAJAKOPAL CHANDRAN

சுடர்: 3 யாழ்ப்பாணம் பிரபவ ஹூ பங்குனி மீ 30 உ செவ்வாய்க்கிழமை ஹிஜ்ரி 1408 ஷஃபான் பிறை 24 (12 04 - 1988) UTHAYAN A LIVELY TAMIL DAILY கதிர்: 5

## கவனம்! கவனம்!! புதுவருடக் கள்வர் நகரில் நடமாட்டம்

யாழ்ப்பாணம், ஏப். 12

புதுவருட சனநெருக்கடியை சாதகமாகப் பயன்படுத்தித் திருடர்கள் தினமும் நகரில் தமது கைவரிசையைக் காட்டி வருகின்றனர்.

பொதுமக்களே உங்கள் பொதிகளிலும் பொக்கட்டுகளிலும் கவனமாக இருங்கள்.

நேற்று கஸ்தூரியார் வீதியில் இரண்டு நபர்களிடம் இருந்து 400 ரூபாவும் 200 ரூபாவும் முறையே ஜேப்படி செய்யப்பட்டன.

உடுப்புப் பார்சல்களையோ, அல்லது வேறு அத்தியாவசியப்பொருள்களையோ உங்கள் சைக்கிள்களிலோ அல்லது வாகனங்களிலோ வைத்துவிட்டுச் செல்லாதீர்கள்.

சைக்கிளில் வைக்கப்பட்டிருந்த ஒருவரின் உடுப்புப் பார்சல் ஒன்றும் திருடர்களினால் அபகரிக்கப் பட்டுள்ளது.

எனவே பொது மக்களே முன் எச்சரிக்கையுடன் ஜாக்கிரதையாக நடந்து கொள்ளுங்கள்.

(ஒ 10)

## இலங்கை வங்கியின் சுன்னாகம் கிளையிலும் 18முதல் பணப் புழக்கம்

யாழ்ப்பாணம், ஏப் 12

இலங்கை வங்கி சுன்னாகம் கிளையில் எதிர்வரும் 18 ஆம் திகதி திங்கட்கிழமை தொடக்கம் பணக் கொடுக்கல் வாங்கல்கள் ஆரம்பமாகும்.

இலங்கை வங்கி யாழ் மாவட்ட முகாமையாளர் திரு. சாம் அரியரத்தினம் உதயனுக்கு இதனைத் தெரிவித்தார்.

மேலும் அவர் இது குறித்து கருத்துத் தெரிவிக்கையில் இந்த நடவடிக்கையினால் கடந்த காலங்களில் சுன்னாகம் கிளை வாடிக்கையாளர்கள் பணத்தைப் பெறுவதிலும், வைப்பிலிடுவதிலும் எதிர்நோக்கிய சங்கடங்கள் குறைக்கப் பட்டுவிடும் என்றார்.

இதேவேளை யாழ் ஸ்ரான்லி வீதிக் கிளை, பருத்தித்துறை, காங்கேசன்துறை ஆகிய கிளைகளில் ஏற்கனவே பணக் கொடுக்கல் வாங்கல் ஆரம்பிக்கப்பட்டு விட்டது தெரிந்ததே.

(ஒ)

## ★ பணயக் கைதிகளில் மற்றும் ஒருவர் கொலை

சைப்பிரஸ், ஏப் 12

கடத்தப்பட்ட குவைத் விமானத்தில் இருந்த பணயக் கைதிகளில் மற்றும் ஒருவர் நேற்றுக் கொல்லப்பட்டார்.

மாலை 5 மணியளவில் விமானக் கதவுகள் திறக்கப்பட்டன.

சடலத்தைக் கடத்தல்காரர்கள் ஓடு பாதையில் தூக்கி வீசிவிட்டு கதவுகளை மூடிக்கொண்டனர்.

அதற்கு முன்னர் கடத்தல்காரர்கள் சைப்பிரஸ் அதிகாரிகளுக்கு விடுத்த எச்சரிக்கையில், ''எரிபொருளை எமக்குத் தாருங்கள்; அதுவரை நீங்கள் பிரேதங்களைக் கண்டுகொண்டிருப்பீர்கள்'' என்று கூறியிருந்தனர்.

பணயக் கைதிகளில் குவைத் அமீரின் உறவி

(6ஆம் பக்கம் பார்க்க)

1987 டிசம்பரில் தடைப்பட்டதற்குப் பதிலாக

# விசேட ஜீ.சி.ஈ.பரீட்சை ஜூலை 2இல் ஆரம்பம்

## பரீட்சை ஆணையாளர் நேற்று உத்தியோக பூர்வ அறிவிப்பு

— அலுவலகச் செய்தியாளர்: சண் ஜோண்சன் —

யாழ்ப்பாணம், ஏப்.12

யாழ்ப்பாண மாவட்டத்தில் நடந்த அசம்பாவிதங்கள் காரணமாக, 1987 டிசம்பரில் நடைபெறுது தடைப்பட்ட ஜீ. சி. ஈ. சாதாரண தர பரீட்சைக்குப் பதிலாக--

விசேட பரீட்சை எதிர்வரும் ஜூலை மாதம் இரண்டாம் திகதி நடைபெறும்.

இதனைப் பரீட்சை ஆணையாளர் நேற்றுத் தனக்கு உத்தியோகபூர்வமாக அறிவித்ததாக, யாழ். மாவட்டக் கல்விப் பணிப்பாளர் ஜனாப் எம். எம். மன்சூர் உதயனுக்குத் தெரிவித்தார்

கல்வி அமைச்சின் செயலாளர் திரு. எல் விஜயமானே, கல்வி அமைச்சர் திரு ரணில் விக்கிரமசிங்காவுடன் ஞாயிற்றுக்கிழமை நடத்திய பேச்சு வார்த்தையின் போது விசேட பரீட்சை நடத்தமுடிவாகியதாகவும்--

அதைத் தொடர்ந்து பரீட்சை ஆணையாளருக்குத் தெரியப்படுத்தப்பட்டு, அவர் நேற்றுக் காலையில் பரீட்சைத் திகதியை நிர்ணயித்து உத்தியோகபூர்வமாக அறிவித்தார் என்றும்-- ஜனாப் மன்சூர் தகவல் தந்தார்

1987 டிசம்பரில் நடைபெறுது தடைப்பட்ட பரீட்சைக்குப் பதிலாக விசேட பரீட்சை ஒன்று நடக்குமா இல்லையா என்பது குறித்து கடந்த பெப்ரவரி மாதத்தில் இருந்து சந்தேக நிலைமையும் பெரும் இழுபறியும் நிலவின.

விசேட பரீட்சையை நடத்துவது சம்பந்தமாக இந்திய அமைதிப்படை அதிகாரிகளும் தமது மட்டத்தில் கொழும்பு அதிகாரிகளை வலியுறுத்தி வந்தனர்.

எனினும் பரீட்சை நடக்கப்படும் என்ற உறுதிமொழிகள் வழங்கப்பட்டனவே அன்றி இட்டவட்டமான ஊர்ஜிதமான, உறுதியான நடவடிக்கைகள் எதுவும் எடுக்கப்படவில்லை

இடையில், மாவட்ட மட்டத்தில் மட்டும் பரீட்சை ஒன்றை நடத்தி மாணவர்களை வகுப்பேற்றவும் முடிவு செய்யப்பட்

(6ஆம் பக்கம் பார்க்க)

## உயிரிழப்பு 300க்கு மேல்!

பாகிஸ்தான் இராணுவ ஆயுதக் கிடங்கு ஒன்றில் ஏற்பட்ட குண்டு வெடிப்பில் இறந்தோரின் எண்ணிக்கை முந்நூறையும் தாண்டிவிட்டதாக அறிவிக்கப்படுகிறது

காயமடைந்தவர்களின் எண்ணிக்கையும் 2 ஆயிரமாக அதிகரித்தது.

வெடித்த ஆயுதங்களில் ஏவுகணைகளும, ரொக்கட்டுக்களும் அடங்கியிருந்தன.

அவற்றில் சில அடையாளங்கள் காணப்பட்டதாகச் சொல்லப்பட்டது

[ஒ-எ]

## புதுவருடத்துக்கு புது நோட்டு

யாழ்ப்பாணம், ஏப் 12

சித்திரைப் புதுவருடத்தை முன்னிட்டு நேற்று யாழ்ப்பாணம் இலங்கை வங்கிக் கிளையில் வாடிக்கையாளர்களுக்கு புதிய நோட்டுக்கள் பரிமாறப்பட்டன

பெரும் எண்ணிக்கையான வாடிக்கையாளர்கள் புத்தம் புதிய நோட்டுக்களை 'கியூ'வில் நின்று பெற்றுச் சென்றனர்.

(ஒ-க)

யாழ்ப்பாணத்தில்

## அமைதிப் படையினர் தேடுதல் நடவடிக்கை

யாழ்ப்பாணம், ஏப் 12

இந்திய அமைதிப் படையினரின் சோதனை நடவடிக்கைகளும். தேடுதல் நடவடிக்கைகளும் யாழ்ப்பாண மாவட்டத்தில் மீண்டும் தீவிரப்படுத்தப் பட்டுள்ளன.

யாழ் நகரப் பகுதியிலும் திடீர் திடீரெனச் சில மணி நேர ஊரடங்குச் சட்டம் அறிவிக்கப்பட்டு, தேடுதல் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன

நல்லூர், கட்டைப்பிராய்ப் பகுதிகளிலு படையினர் அடிக்கடி சோதனை நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

கடந்த ஞாயிற்றுக்கிழமை யாழ் நகரில் திடீர் ஊரடங்குச் சட்டம் அறிவிக்கப்பட்டு, மக்கள் சோதனைக்கு உள்ளாக்கப்பட்டது குறிப்பிடத்தக்கது.

இதேவேளை, நேற்றுப் பிற்பகல் 3-30க்கு, 4-30க்குமிடையே பாங்ஷால் வீதி, பிரதான வீதி, 6ஆம் குறுக்குவீதி, மவுண்கார்மேல் வீதிக்கு உட்பட்ட பகுதி இந்திய அமைதிப் படையால் திடீரெனச் சுற்றிவளைக்கப்பட்டது.

நூற்றுக்கணக்கான அமைதிப் படையினர் வீடுவீடாகத் தேடுதல் நடத்தி இளம்வயதினரை பிரதானவீதி, தண்ணீர்த் தாங்கி மடம் வீதிச் சந்திக்குக் கொண்டு சென்றனர்.

முகமூடி முன்பாக நிறுத்தியதில் சந்தேகத்திற்கு இடமான இரு இளைஞர்கள் விசாரணைக்காக அமைதிப் படையினரால் அழைத்துச்செல்லப்பட்டு பின்னர் மாலையில் விடுவிக்கப்பட்டனர்.

(ஒ-10-51

முச்சந்தி முரளி



ஒரு விசேட பரீட்சை நடத்திறதுக்கு முடிவு எடுக்க உவர் ரணிலுக்கு நாலு மாசம் பிடிச்சிருக்குது பாத்தியளே!

## முட்டுக்கட்டை நிலைக்கு டிக்ஷிற் தான் காரணம்!

### குமார்பொன்னம்பலம் குற்றச்சாட்டு

— கொழும்பிலிருந்து: எஸ் ஈ. நாதன் —

கொழும்பு, ஏப். 12

புலிகளுக்கும், இந்திய அரசுக்கும் இடையில் ஏற்கனவே இடம்பெற்ற பேச்சு வார்த்தைகளில் முட்டுக்கட்டை ஏற்பட்டதற்குக் கொழும்பில் உள்ள இந்தியத் தூதுவர் டிக்ஷித்தான் மூல காரணம்.

தமிழ்க் காங்கிரஸ் பொதுச் செயலாளர் திரு. குமார் பொன்னம்பலம் மேற்கண்டவாறு குற்றஞ்சாட்டினார்.

உதயன் செய்தியாளருக்கு அளித்த பேட்டி ஒன்றில் அவர் இதனைத் தெரிவித்தார். திரு. குமார் மேலும் கூறியதாவது:

இனப் பிரச்சினை தொடர்பாக இலங்கையும், இந்தியாவும், புலிகளும் முத்தரப்புப் பேச்சு நடத்தவேண்டும்.

ஏற்கனவே தமிழர்களின் சார்பில் தமிழீழ விடுதலைப் புலிகளோ அன்றி வேறு அமைப்புக்களோ அழைக்கப்படாமல் இலங்கை-இந்திய அரசாங்கங்கள் எமது இனப் பிரச்சினையைத் தீர்ப்பதற்காகச் செய்து கொண்டஒப்பந்தத்துக்கு ஏற்பட்ட கதியை இதற்கு ஓர் உதாரணமாகக் கொள்ளலாம்.

ஒப்பந்தத்தின் கீழ் பல உறுதி மொழிகளை இலங்கை அரசு இந்தியா

(6ஆம் பக்கம் பார்க்க)

### விசேட ரயில் சேவை

கொழும்பு, ஏப் 12

புத்தாண்டை முன்னிட்டு வவுனியாவுக்கும் அநுராதபுரத்துக்கும் இடையே இம்மாதம் 18 ஆம் திகதி வரை விசேட ரயில் சேவைகள் இடம் பெறும் என்று ரயில்வே திணைக்களம் அறிவித்துள்ளது. (ஒ-எ)

## ஜெயலலிதாவுக்கு கத்தி வீச்சு!

சென்னை, ஏப் 12

கொலை முயற்சி ஒன்றில் இருந்து அ. தி. மு. க. [ஜெ] அணிப் பொதுச் செயலாளர் ஜெயலலிதா தப்பினார் என அறிவிக்கப்படுகிறது.

சென்னை ஆழ்வார் பேட்டையில் கடந்த புதன் பிற்கல் இக்கொலை முயற்சி மேற்கொள்ளப்பட்டதாகச் சொல்லப்படுகிறது

இது குறித்துக் கூறப்படுவதாவது:-

ஆழ்வார் பேட்டையில் உள்ள அ தி மு க [ஜெ] அலுவலகத்தில் செல்வி ஜெயலலிதா ஆதரவாளர்களிடமிருந்து முறைப்பாடுகளைப் பெற்றுக் கொண்டிருந்த சமயம் அடையாளம் தெரியாத ஒருவர் கத்தி ஒன்றை ஜெயலலிதா மீது வீசினார் ஜெயலலிதாவைக் கத்தி தாக்கவில்லை அவரின் மெய்க்காப்பாளரைக் கத்தியின் பிடி தாக்கியது ஆனால் இரத்தக் காயம் எதுவும் ஏற்படவில்லை

ஜெயலலிதாவின் மெய்ப்பாதுகாவலர்கள் ஆதரவாளர்கள் அந்த நபரைத் துரத்திச் சென்றனர் அந்த நபர் தப்பிவிட்டார்

இது சம்பந்தமாக அபிராமபுரம் பொலீஸில் முறையிடப்பட்டுள்ளது. [ஒ-எ]

## திருமலை அகதிகளை அழைத்துச் செல்ல அமைதிப்படை ஏற்பாடு

யாழ்ப்பாணம் ஏப் 12

யாழ்ப்பாணக் குடாநாட்டில் தங்கியிருக்கும் திருகோணமலை அகதிகளை அவர்களதுசொந்த இடங்களுக்குத் திருப்பி அழைத்துச் செல்ல இந்திய அமைதி படை உதவ உள்ளது

இதன் முதற்கட்டமாக வடமாராட்சியில் தற்காலிகமாக தங்கி இருக்கும் திருகோணமலை அகதிகளையும், பருத்தித்துறை உதவி அரசாங்க அலுவலகத்தில் இம்மாதம் 16 ஆம் திகதி சனிக்கிழமைக்குப் பிந்தாமல் பதிவு செய்து கொள்ளுமாறு அமைதிப்படை நகரக் கொமாண்டர் அலுவலகத்தின் பத்திரிகைக் குறிப்பு ஒன்றில் கோரப்பட்டுள்ளது.

உதவி அரச அதிபர் அலுவலகத்தில் தமது விபரங்களைப் பதிவு செய்வோரின் எண்ணிக்கையைப் பொறுத்துப் போக்குவரத்து ஒழுங்குகள் செய்யப்படும்.

இந்த விவரங்கள் கிடைத்த பின்னரே திகதியும் நிர்ணயிக்கப்படும்—

திருகோணமலை திரும்பும் அகதிகளுக்குப் பண உதவியும், இலவச போக்குவரத்தும் ஏற்

(6 ஆம் பக்கம் பார்க்க)

## மூன்றுவது தடவையும் ஜே.ஆர்.போட்டியிடலாமா?

### கமிட்டியினர் இரண்டுபட்ட கருத்து

கொழும்பு, ஏப் 12

மூன்றுவது தடவையாக ஜனாதிபதி தேர்தலில் திரு. ஜே ஆர் ஜெயவர்த்தனா போட்டியிடுவது பற்றிய சாத்தியக்கூறுகளை ஆராய நியமிக்கப்பட்ட அறுவர் கமிட்டி, தனது அறிக்கையைச் சமர்ப்பித்து விட்டது.

அரசமைப்புச் சட்டத்தின் 31 [2] சரத்துக்கு திருத்தம் செய்த பின்னர் தான் திரு. ஜெயவர்த்தனா மூன்றுவது தடவையாகப் போட்டியிட முடியும்.

இந்தச் சரத்து இரண்டு தடவைகளுக்கு மேல் ஒருவர் ஜனாதிபதி தேர்தலில் போட்டியிட முடியாது என்று கூறுகிறது.

இது ஓர் அபிப்பிராயம்.

இரண்டாவது அபிப்பிராயம்: ''இந்த சரத்தின் சில வாசகங்களை திருத்தி விட்டு மூன்றுவது தடவையாக திரு ஜெயவர்த்தனா போட்டியிடலாம்'' என்று கூறுகின்றது.

அறுவர் கமிட்டியின் அறிக்கையில் இந்த இரண்டு அபிப்பிராயங்களும் தெரிவிக்கப்பட்டுள்ளன. [ஒ-எ]

கச்சதீவு யாத்திரை:

## சுப்பிரமணிய சுவாமி இன்று நட்வர்சிங்குடன் பேச்சு

### கடற்படை பாதுகாப்பு வழங்கும்?

பம்பாய், ஏப். 12

கச்சதீவு யாத்திரை குறித்து ஜனதாக் கட்சி பொதுச் செயலாளர் டாக்டர் சுப்பிரமணிய சுவாமி இன்று செவ்வாய்க்கிழமை வெளியுறவு இணை அமைச்சர் நட்வர் சிங்கைச் சந்தித்துப் பேசுவார்,

இத்தகவலை அவரே வெளியிட்டார்.

கச்சதீவு யாத்திரை பற்றி அவர் பாதுகாப்பு இணை அமைச்சர் சந்தோஷ் மோகன் தேவ்வை டாக்டர் சுப்பிரமணிய சுவாமி சந்தித்து பேசினார்.

யாத்திரையின் போது இந்தியக் கடற்படை பாதுகாப்பு வழங்க நடவடிக்கை எடுப்பதாக இணை அமைச்சர் உறுதியளித்தார் என்று டாக்டர் சுப்பிரமணிய சுவாமி தெரிவித்தார்.

இம்மாதம் 23ஆம் திகதி ஆரம்பமாக இருப்பதாக அறிவிக்கப்பட்டுள்ள இந்த யாத்திரையில் ஐயாயிரம் மீனவர்களும் டாக்டர் சுப்பிரமணிய சுவாமியுடன் சேர்ந்து கொள்வர்.

### சுபநேரம்

12 - 4 - 1988
பங்குனி 30
செவ்வாய்க்கிழமை
சுபநேரம்:
10.36 முதல் 12.06வரை
ராகுகாலம்:
3.06 முதல் 4 36 வரை
இவை பகலுக்கும் இரவுக்கும் பொருந்தும்

இளைய தலைமுறையின் இதயம் கவரும் இன்றைய நாளிதழ்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ★ சின்னஞ் சிறு விளம்பரம் ★

### விற்பனைக்கு

Uplands Farm Ltd. கோழிக் குஞ்சுகள் 12-4-88 செவ்வாய்க்கிழமை விநியோகிக்கப்படும் (Lohmann) பிறவுன் பேடு ரூபா 12-50 (Lohmann) சேவல் ரூபா 4-00 சொண்டு வெட்டப்பட்டது. தடுப்பூசி போடப்பட்டது) முன் கூட்டியே பதிவு செய்யவும் இல. 9. சூராவத்தை ரோட்டு (கந்தையா லேன்) சுன்னாகம் [ஸ்டேசனுக்கு அண்மையில்]

அவுஸ்திரேலியா அயன் சேவ் [இரும்புப்பெட்டி] 20 படி அரிசி வேகக் கூடிய கிடாரம் முதிரை மரத்திலான பாண் கேயிற் ஜன்னல், 3 லாச்சி சகியர் கவுண்டர் மேசை விற்பனைக்குண்டு க. கேணுப்பிள்ளை 101.2 ம் குறுக்கு வீதி, யாழ்ப்பாணம். (2500)

### காணிவிற்பனை

வல்வெட்டித்துறை சிவன் கோயில் வீதியில் இரண்டு பரப்புக் காணி விற்பனைக்கு - நாலுபக்கமும் சுவர்கள்- இராமச்சந்திரன், அம்பான் ஸ்டோஸ், வித்தனை சந்தி, வல்வெட்டித்துறை. (2785)

### புத்தகங்கள்

ஜோஸ்யரின் விபவ வருஷ புத்தாண்டுப் பலன்கள் முற்றிலும் புதிய விடயங்கள் ஒவ்வொரு விட்டிற்கும் ஒவ்வொரு புத்தகம் எல்லா விடயங்களை தங்கியும் மலிவு விலை 3 00 ஏ. எஸ் நடராசா 01 பஸ் நிலையம் யாழ்ப்பாணம். (2502 B)

ஆங்கிலத்தில் கடிதம் எழுதுவது எப்படி? 17/50 தமிழ் மூலம் சிங்களம் 20/ரூபா. Spoken English 50/- மலிவு விலையில் நியூமராலஜி 6/50 பூபாலசிங்கம் புத்தகசாலை யாழ்ப்பாணம். விரைவில் கிடைக்கும் செங்கை ஆழியானின் மழைக்காலம் முழு நாவல். (2503)

### சேவை

ஒமேகா ஸ்தாபனத்தார் மின் உபகரணங்கள் திருத்துதல் றிவைண்டிங் செய்தல் ஆகியவற்றுடன் புக் தாண்டு முதல் குளிர்சாதனப்பெட்டி, எயர் கொண்டிசன் திருத்தும் வேலைகளும் உத்தரவாதத்துடன் செய்து கொடுக்கவுள்ளார்கள். Omega, Manipay Road, Jaffna. (2768)

### ரேடியோ போட்டோ ஸ்ரற்

தரம் நாடுவோர் கவருது நாடுமிடம் "கிளின்கட்" தெளிவான போட்டோ ஸ்ரற் பிரதிகளையும் தரமான ரேடியோ பிரதிகளையும் தமிழ். ஆங்கில ரைப்பிங் வேலைகளையும் விரைவாகப் பெற்றுக்கொள்ள "கிளின்கட்" 239. மின்சார நிலைய வீதி, யாழ்ப்பாணம்

### போட்டோ ஸ்ராட்

யாழ்நகரில் தரமான "போட்டோஸ்ராட்" பிரதிகளுக்கும் தெளிவான 'ரேடியோ' வேலைகளுக்கும் சிறந்த முறையிலான தமிழ். ஆங்கிலம் 'ரைப்பிங்' வேலைகளுக்கும் என்றும் நம்பிக்கையான நிறுவனம் கிளின்கட், இல; 239, மின்சார நிலைய வீதி, யாழ்ப்பாணம்.

### வேலையாட்கள் தேவை

சோடா பெட்டி ஏற்றி இறக்குவதற்கு நல்ல வேலையாட்கள் தேவை உடன் நேரில் வரவும் பிள்ளையார் ஸ்ரோர்ஸ் 31 மாவிட்டபுரம் வீதி யாழ்ப்பாணம். [2475]

### பயிற்சி

Computer programming in Basic Language, காலம் 2 மாதம, Fees 750/- மட்டும் ஆரம்பம் 22-4-88 வெள்ளி 2 00 P.M மேலதிக விபரங்கட்கு துர்க்கா ஸ்ரேஸனேர்ஸ். சுன்னாகம். [2347]

### விற்பனை

நல்ல நிலையிலுள்ள Honda C - 90 [Econo Power] மோட்டார் சைக்கிள் விற்பனைக்கு உண்டு. ந. ஸ்ரீகணேஷ் "இருயஸ் தான்" வீபல் காமம், தெல்லிப்பழை [2514]

### தேவை

ஓட்லி சிலின்டர் மெஷின் மைண்டர், அச்சுக்கோர்ப்பாளர்கள் பயிற்சிப் பத்திரிகையாளர்கள் உடன் தேவை. விபரங்கள் உடன் நேரில் வரவும். நம்நாடு இன் வெஸ்ற்மென்ற் புரூஜெக்ற் 194 A, K K. S Road, Chunnakam. (2336)

சகலவிதமான T.V றேடியோ டெக்சாதனங்கள் திருத்துவதில் அனுபவம் உள்ளவர்கள் தேவை VENUS RECORDING and Radio Watch Works 226/1 Stanley Road Jaffna [2473]

மூன்று மைல் சுற்றுடலில் வீடு ஒன்று உடன் தேவை. விபரங்களுக்கு மலிபன் கூல் பார் இலக்கம் 25, யாழ்ப்பாணம் [2513]

### காணவில்லை

09-04-1988 இல் "ராஜா ரவல்ஸ்" பஸ் இல 29 ஸ்ரீ 5081 வவுனியா புகையிரத நிலையத்திலிருந்து யாழ்ப்பாணம் வரும் பொழுது சூட்கேஸ் சைமாறி விட்டது தயவு செய்து எடுத்தவர்கள் 66 சப்பல் வீதியில் தொடர்பு கொள்ளவும். நன்றி. [2515]

நல்லூர் கந்தஸ்வாமி கோவிலில் 1-4-88 வெள்ளிக்கிழமை பங்குனி உத்தரத்தில் அன்று எமது முக்கியமான நகை ஒன்று தவறிவிட்டது கண்டெடுத்தவர்கள் தயவு செய்து கீழ்க்காணும் விலாசத்தில் தொடர்புகொள்ளுமாறு அன்புடன் கேட்டுக் கொள்கிறோம். நிச்சயமாக சன்மானம் வழங்கப்படும். இல. 12, சங்கிலியன் வீதி, நல்லூர். (2772)

## வவுனியாவிலிருந்து மொனராகலைக்கு

குருநகர், ஏப். 12 வவுனியா கட்டடத் திணைக்களத்தைச் சேர்ந்த 12 வடபகுதி தொழில் நுட்பவியலாளர் வவுனியாவில் அபிவிருத்தி வேலைகள் தடைப்பட்டுள்ளன தன் காரணமாக உடனடியாக மொனராகலை மாவட்ட கட்டடத் திணைக்கள காரியாலயத்திற்கு இடமாற்றம் செய்யப்பட்டுள்ளனர்.

தற்போதைய நிலையில் அங்கு கடமைக்குச் செல்லத் தயக்கம் காட்டி இவர்கள் உயர் அதிகாரிகளிடம் மனுச் செய்துள்ளனரென்று தெரியவந்துள்ளது. (இ-51)

## 2ஆம் 3ஆம் 4ஆம் வார இலவச உணவுப் பொருள்

கோப்பாய், ஏப். 12 கோப்பாய் வடக்கு கிராமசேவையாளர் பிரிவுக்கு உட்பட்டவர்களுக்கு புனர்வாழ்வு அமைச்சினால் வழங்கப்படும் 2ஆம் 3ஆம் 4ஆம் வாரத்து இலவச உணவுப் பத்திரங்களுக்கு நீர்வேலி ப. நோ. கூ. சங்கத்தினால் கோப்பாய் வடக்கு கிளைகளில் உணவுப் பொருள்கள் வழங்கப்பட்டு வருகின்றன

இலவசமாக மா, சீனி அரிசி என்பன விநியோகிக்கப்படுகின்றன.

வலி- கிழக்கு உதவி அரசாங்க அதிபர் பிரிவுக்கு உட்பட்ட ஏனைய குதிகளுக்கு தற்போது அவ்வப் பகுதி கிராம சேவையாளர்களினால் 2ஆம் 3ஆம் 4ஆம் வாரங்களுக்குரிய இலவச உணவுப் பத்திரங்கள் விநியோகிக்கப்பட்டு வருகின்றன (இ-72)

## புதுவருடப் போட்டி

குலனை அராலி வடக்கு வட்டுக்கோட்டை கலைவாணி விளையாட்டுக் கழகத்தின் 41 ஆவது ஆண்டு நிறைவு நாளையாகும். இதனை முன்னிட்டு நாளை புதன்கிழமை மேற்படி விளையாட்டுக் கழகம் புதுவருட விளையாட்டுப் போட்டி ஒன்றை நடத்த உள்ளது. (ஒ-9)

## அரை ஆண்டு நினைவஞ்சலி



**திரு. நடராசா இன்பராஜா (இன்பம்)**

படைப்பு: 12 - 5 - 1965 | பறிப்பு: 12 - 10 - 1987

ஊரெரிந்த வேளையினில்
உலைக் காணவிலை
காலன் சுவடு பார்த்து
கடிதினில் தேடினோம் நாம்
கருகிய ஓர் இளம்தளிராய்
கனல விழியல்
உன்னைக்கண்டோம்
இன்பா என அழைத்த
எம் இன்பராஜாவே - நின்
இளம் சிரிப்பும் தன்முகமும்
எங்கே மறைந்ததடா?
கோப்பாயின் குலவிளக்கே
உன் இழப்பு மரணமல்ல
சரித்திரமதனை ஓர்நாள்
சங்கமிக்கும் நிச்சயமே!

நின் ஆத்மா சாந்திபெற ஆண்டவனை வேண்டுகின்றோம்.

உன்பிரிவால் துயருறும்
3 ஆம் வருடவிஞ்ஞான பீட மாணவர்கள்
திருநெல்வேலி.

யாழ் பல்கலைக்கழகம்
திருநெல்வேலி. (2789)

## அகில இலங்கை பரஸ்பர சகாய நிதிச் சங்கம்

தபாற் கந்தோரடி, வட்டுக்கோட்டை.

ஆரம்பம்: 1957 | பதிவு இலக்கம்: S.154 26-3 64

எமது அங்கத்துவப் பெருமக்களுக்கு பல்வளமும் பொங்கிப் பொழிய எமது புத்தாண்டு வாழ்த்துக்கள்!

பெற்றோர்களே!

இச் சித்திரைத் திருநாளில் உங்கள் சிறார்களின் வருங்காலம் வளம் பெற வேண்டும் என்பதைப் பற்றிச் சிந்தித்தீர்களா?

உங்கள் கன்னிப்பெண்களின் திருமணத்திற்குரிய பணத்தைச் சேர்த்து விட்டீர்களா?

இப் புனித புத்தாண்டு தினத்தில் அவர்களின் ஒளிமயமான எதிர்காலத்திற்கு வித்திடுங்கள்.

31 ஆண்டுகளாக அப்பழுக்கற்ற சேவையாற்றி தமிழ் பேசும் மக்களின் நம்பிக்கை நட்சத்திரமாக, இதய தீபமாக ஒளிவிளக்காக அற்புதத் தொண்டுகள் பல புரிந்து அங்கத்தவர்களால் அங்கத்தவர்களுக்காக நடாத்தப்படும் மக்கள் ஸ்தாபனமான இந் நிறுவனத்தில் இன்றே நீங்களும் அங்கத்தவராகி உங்கள் மக்கள் செல்வங்களையும் சேர்த்துப் பெருநிதியம் பெறுங்கள்

புதுவருடதினத்திலே நீங்கள் எடுக்கும் பிரதிக்ஞைகளிலே இது தலையாயதாக இருக்கட்டும்.

மக்கள் நலிவுற்று, நாடு பொலிவற்று இருந்த துன்பம், துயர் சூழ்ந்த வேளையிலும் தயங்காது முன் சென்று அங்கத்தவர் துயர் தீர்த்த உற்ற நண்பன். அகில இலங்கை பரஸ்பர சகாய நிதிச் சங்கம் என்பதை மறவாதீர்கள்.

இச் சங்கம் இதுவரை காலமும் சுமார் பதினைந்து இலட்சங்களுக்கு மேல் தனது அங்கத்தவர்களுக்கு நன்கொடையாக கொடுத்திருக்கின்றது என்பதை மறவாதீர்கள்

சங்கத்தின் அங்கத்தவர்கள் மாதந்தவறாது தொடர்ந்து 5 வருடங்கள் தமது அங்கத்துவ பணமாகிய ரூபா 20/- கட்டி வந்தால் அவர்களுக்கு குறைந்த வட்டியில் கடன் பெற வசதிகள் செய்து கொடுக்கப்படும் இச் சங்கத்தின் நோக்கமாவது சிக்கன முறையைக் கையாண்டு அங்கத்தவர்களைச் சேமிக்கச் செய்வது பணக் கஷ்டம் நிகழும் பொழுதோ அன்றேல் வாழ்வின் இறுதிக் காலத்திலோ பண உதவி புரிதலுமாகும் எனப் பதிவு செய்யப்பட்டுள்ளது

"வாழ்க அகில இலங்கை பரஸ்பர சகாய நிதிச் சங்கம்
வளர்க அங்கத்தவர் தம் ஒற்றுமை!!"

OBJECT: The object of the society shall be to promote thrift among members with a view to provide financial help in tunes of pecuniary difficulty or death of any member.

வே. இ. புவனேஸ்வரன்
தலைவர்

## UPLANDS FARM

எமது வாடிக்கையாளர் யாவருக்கும்

**புது வருட வாழ்த்துக்கள்**

**கோழிக்குஞ்சு** தொகையாகவும் சில்லறையாகவும் விநியோகிக்கப்படும்,

இனங்கள்:

★ (LOHMANN) பிறவுன் பேட்டுக்குஞ்சு — விலை ரூ 12 50
(குறுகிய காலத்தில் தொடர்ந்து அதிக நாட்கள் முட்டையிடும்.)

★ (LOHMANN) சேவல் (இரண்டு மாதத்தில் அதிக நிறையுள்ள வளர்ச்சியடையக்கூடியது) — ரூ 4 00

★ [COBB] BROILER, இறைச்சிக் கோழிக்குஞ்சு — ரூ 13 50

★ [DEKALB] வெள்ளைப் பேட்டுக்குஞ்சு — ரூ. 10 50

★ ஒரு மாதக் குஞ்சுகள் வளர்த்துக்கொடுக்கப்படும்:

- [LOHMANN] பிறவுண் ஒருமாத பேடு — ரூ. 22.50
- [LOHMANN] ஒரு மாத சேவல் — ரூ 15.00

★ சொண்டு வெட்டப்பட்டு தடுப்பூசி போடப்பட்டது

★ வெகு விரைவில் எங்கள் வாடிக்கையாளர்களுக்கு இன்னும் குறைந்த விலையில் குஞ்சுகள் விநியோகிப்போம்.

வட இலங்கை விநியோகஸ்தர்:

இல. 9 சூராவத்தை றேட்,
(கந்தையா லேன்) சுன்னாகம்.
(ஸ்டேஷனுக்கு அண்மையில்)

[2462]

ஸ்ரீலங்கா கல்வி நிர்வாகத் தெரிவுப்பரீட்சை

## மே 1988

S. L. E. A. S. தெரிவுப் பரீட்சைக்கு தோற்றும் ஆசிரியர்களுக்காகிய

### விசேட பயிற்சி வகுப்புக்கள்

- பரீட்சைக்குரிய சகல பாடங்களிலும் விரிவான போதனை.
- தரமான பல விரிவுரையாளர்களின் இணைந்த சேவை.

ஆரம்பம்: 16 - 4 - 88

விபரங்களுக்கு:

**அஸ்ரன் இன்ஸ்ரிரியூட்**

166/1, ஆஸ்பத்திரி வீதி,
யாழ்ப்பாணம்.

மத்திய கிழக்கு நாடுகளுக்கான

## பிரயாண ஒழுங்குகள்

**● சவூதி அரேபியா**

துறைமுக தொழிலாளர்கள்
வீட்டு சாரதிகள்
மெக்கானிக் சாரதிகள்
பிளம்பர்ஸ்
தொழிலாளர்கள்

**● குவைத்**

ஆஸ்பத்திரி துப்புரவாளர்
பண்ணைத் தொழிலாளர்கள்
வீட்டு சாரதிகள்

மற்றும் சவூதி அரேபியா, குவைத், அபுதாபி, பாக்ரெயின், ஆகிய நாடுகளுக்குப் பணிப்பெண்கள் தேவை

அத்துடன் பாஸ்போட், BOND, VISA, டிக்கட்டிங் முதலியனவும் உடனுக்குடன் செய்து தரப்படும்.

இந்தியா செல்லும் பிரயாணிகளுக்கான சகல ஒழுங்குகளும் எங்களால் செய்து தரப்படும்.

நீங்கள் தொடர்பு கொள்ள வேண்டிய முகவரி:

| | |
|---|---|
| வ. பரஞ்சோதி | எஸ். திருநாவுக்கரசு |
| கிருஷ்ணா ட்ரவல்ஸ் | (ஆசிரியர்) |
| கரடிபோக்குச் சந்தி, | சங்கத்தானை லேன், |
| கண்டி வீதி, | சங்கத்தானை, |
| கிளிநொச்சி. | சாவகச்சேரி. |

(2498)

## 60 ஆம் நாள் நினைவஞ்சலி



மலர்வு: 20-10-1937 | உதிர்வு: 13-02-1988

### திரு.தி.சி சண்முகலிங்கம்

எங்கள் நலம்பேணி எல்லோர்க்கும் சேவை செய்து பொங்கும் புகழோடு பூரித்து வாழ்ந்தனையே கோயில் திருப்பணிகள் குவலயத்தார் நற்பணிகள் ஓயாமல் உறங்காமல் உயிர் மூச்சாய்ச் செய்தனையே! செய்பணியும் தொண்டும் சேவையும் கண்டடலை ஐபோனபொழுதில் "ஆள் இல்லை" என்பதுவோ! கோபுரமாய் வாழ்ந்த நம் குடும்பம் நிலைகுலைந்து தாவு கொம்பு இல்லாத தளிர்க் கொடியாய் ஆனதையா! உங்களது ஆன்மா உய்ந்திடவே அஞ்சலித்தோம். உங்களது நினைவில் உயிர் வாழ்வோம் வாழ்விப்பாய்

மனைவி, மக்கள்,
சுற்றத்தார்.

"சுகந்தம்"
இணுவில் கிழக்கு,
இணுவில். (2787)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## தேவை

★ யாழ்நகரில்...
பிரபல்யமான ஸ்தாபனம் ஒன்றிற்கு நிர்வாகத்திறமையுடைய ஒருவர் தேவை

வயதெல்லை — 50 க்குட்பட்ட
தகைமை — Book keeping, Typing

தகுதியுடையோர் கீழ்க்கண்ட விலாசத்திற்கு சான்றிதழுடன் விண்ணப்பிக்கவும்.
No. 127 C/o உதயன் மின்சார நிலைய வீதி, யாழ்ப்பாணம்.


# வடக்கு, கிழக்குக்கு 2,000 ஆசிரியர்கள் மே முதல் நியமனம்

கொழும்பு, ஏப் 12
வடக்கு, கிழக்கு மாகாணங்களில் இரண்டாயிரம் ஆசிரியர்கள் நியமிக்கப்படவுள்ளனர்.

கல்விச் சேவைகள் ஆணைக்குழு வட்டாரங்கள் இதனைத் தெரிவித்தன.

திருமலை மாவட்டத்தில் 700 ஆசிரியர்கள் நியமிக்கப்படுவர். இதற்கானபூர்வாங்கநேர்முகப் பரீட்சைகள் முடிவடைந்து விட்டன.

கடந்த ஆகஸ்டில் நடந்த எழுத்துப் பரீட்சைக்கு அமர்ந்தவர்களில் இருந்தே இவர்கள் நியமிக்கப்படுவர்.

அடுத்த மாதத்தில் இருந்து இந்நியமனங்கள் வழங்கப்படும் என்று அவ்வட்டாரங்கள் தெரிவித்தன.

[மற்றொரு செய்தி 4 ஆம் பக்கத்தில்]

[ஒ-எ]

# உபதபால் அதிபர்களுக்கும் சம்பள உயர்வு கிடைக்கும்

## வரவு — செலவுத் திட்டப் பிரகாரம்

யாழ்ப்பாணம், ஏப் 12
கடந்த வரவு செலவுத் திட்டத்தில் அரச ஊழியர்களுக்கு அறிவிக்கப்பட்ட சம்பள உயர்வை வெகுவிரைவில் அனைத்து உப தபால் அதிபர்களும் பெற்றுக்கொள்ள முடியும்.

இதேவேளையில் உப அஞ்சல் அதிபர்களுக்கு ஒய்வூதியம் வழங்கவும் நடவடிக்கை எடுக்கப்படும்.

இவ்வாறு அகில இலங்கை தமிழ் பேசும் உபதபால திபர்கள் தொழிற்சங்கத்திடம் உறுதியளிக்கப்பட்டுள்ளது

அண்மையில் பிரஸ்தாப தொழிற்சங்கத்தின் தலைவர் ஐ. நடராசா செயலாளர் செ. தவராஜா, பொருளாளர் கொ. அ. ஸ்ரனிஸ்லாஸ், யாழ் கிளைத் தலைவர் சி. இரத்தின சபாபதி ஆகியோர் கொண்ட தூதுக்குழு ஒன்று கொழும்பு சென்றது. அங்கு தபால் தந்தி அமைச்சின் செயலாளர், தபால்மா அதிபர், மற்றும் திணைக்கள அதிகாரிகள் ஆகியோரைச் சந்தித்து இதுபற்றி பேச்சு நடத்தியபோதே சம்பள உயர்வு வழங்குவது சம்பந்தமான உறுதி வழங்கப்பட்டது.

மேலும் இலங்கையில் பல பகுதிகளிலும் வழங்கப்பட்டுவிட்ட உப அஞ்சல் அதிபர்களுக்கான திணைக்கள அடையாள அட்டைகளை வடக்கு, கிழக்குப் பகுதிக்கும் விநியோகிக்க இணக்கம் காணப்பட்டுள்ளது.

## யாழ் - கொழும்பு மினி பஸ் சேவை

வடபிராந்திய மினி பஸ் சேவை சங்கத்தின் அனுசரணையுடன் யாழ்-கொழும்பு மினி பஸ்கள் ஒரு சில தினங்களில் குறைந்த கட்டணத்தில் சேவையாற்ற ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

இப்படி வடபிராந்திய மினிபஸ் சங்கங்களின் சமாஜத் தலைவர் பொன் மதிமுகராசா உதயனுக்குத் தெரிவித்தார்.

தமக்கும் வடபிராந்திய போக்குவரத்துச் சபைத் தலைவருக்கும் இடையே நடந்த பேச்சு வார்த்தைகள் வெற்றியளித்துள்ளதாகவும் இதனை அடுத்து யாழ். பஸ் நிலையப் பகுதியின் உள்ளே தினசரி இரண்டு கொழும்பு மினி பஸ்களை நிறுத்த அனுமதி வழங்கப்பட்டுள்ளதாகவும் அவர் தெரிவித்தார். (ஒ-எ)

## 10ஆம், 11ஆம் ஆண்டு பாடப் புத்தகங்களை தவணை ஆரம்பத்தில் பெறலாம்

யாழ்ப்பாணம், ஏப் 12
10 ஆம், 11 ஆம் ஆண்டுக்கான இலவச பாடப் புத்தகங்கள் யாழ் கல்வித் திணைக்களத்தை வந்தடைந்துள்ளன

கடந்த தவணையில் பெரும்பாலான பாடசாலைகளுக்கு பாடப் புத்தகங்கள் வழங்கப் பட்டுவிட்டன.

ஆனாலும் சில பாடசாலைகளுக்கு அரைகுறையாகவே புத்தகங்கள் வழங்கப்பட்டன. புத்தக வழங்கலை பூரணப்படுத்துவதற்காகவே இந்தப் புத்தகங்கள் தருவிக்கப்பட்டுள்ளன.

இவ்வாறு கல்வித் திணைக்கள அதிகாரி ஒருவர் உதயனுக்குத் தெரிவித்தார்.

மேலும் இப்புத்தகங்கள் அடுத்த தவணை ஆரம்பம் முதல் வழங்கப்பட உள்ளதால் பற்றுக்குறையாக புத்தகங்கள் விநியோகிக்கப்பட்ட பாடசாலைகளின் அதிபர்கள் யாழ் கல்வித் திணைக்களத்துடன் தொடர்பு கொள்ளும்படியும் அவர் கோரிக்கை விடுத்தார். (ஒ-9)


## பிரயாண ஒழுங்குகள்

### ★ சவூதி அரேபியா

| | (வயது) |
|---|---|
| ★ எயாப்போட் கிளீனேர்ஸ் | 21-40 |
| ★ ஆஸ்பத்திரி கிளீனேர்ஸ் | 21-40 |
| ★ ஹொட்டல்வெயிற்றர்ஸ் | 21-40 |
| ★ லேபரர்ஸ் | 21-40 |

### ★ குவைத்

பெண்கள்--- 40 பெண்கள் உடனடியாகத் தேவை தையல் வேலை தெரிந்தவர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும்.

★ காமன்ஸ் (Garments)
தமிழ் முஸ்லிம் இருபாலாரும் உடனடியாக 5 படம் பாஸ்போட்டுடன் இங்கு தொடர்பு கொள்ளவும்.

### ★ குவைத்

ஆண்கள்: ஆஸ்பத்திரி கிளீனேர்ஸ்
வயது 17இலிருந்து 45வரை
சம்பளம் K.T. 30 டினார்.
2 மணித்தியாலம் மேலதிக வேலை
3 வருட ஒப்பந்தம்
(சாப்பாடு, தங்குமிடம், வைத்தியவசதி எல்லாம் இலவசம்.)

### ★ சவூதி அரேபியா

எயாப்போட் கிளீனேர்ஸ்,
51 பேர் உடனடியாகத் தேவை குறைந்த கட்டணம். கட்டுப்பணம் 7500/-
ஒப்பந்தங்கள் 6 மாதங்கள் சம்பளம் 450 SR
யுனைற்றட் வழங்கும் மற்றுமொரு துரித சேவை. 3 தொடக்கம் 5 நாட்களுக்குள் குறைந்த செலவில் சிறந்த கொம்பியூட்டர் முறையில் கலர் பிலிம்ஸ் சுருள்களை கழுவியும் கொடுக்கப்படும்.

மேலதிக விவரங்களுக்குக் கீழ்க்காணும் முகவரியிலுள்ள எமது காரியாலயத்துடன் உடனடியாகத் தொடர்பு கொள்ளவும்.

யுனைற்றட்
இன்ரநஷனல் ஏஜன்சி
666, கே. கே. எஸ். ரோட்,
யாழ்ப்பாணம்.
(யாழ். இந்துக்கல்லூரிக்கு அருகாமை)


# அமைதிப்படையினர் வெளியேற மறுத்தால் என்ன செய்வது?

## லலித் கூற மறுக்கிறார்

கொழும்பு. ஏப் 12
இந்திய அமைதிப்படையினர் வெளியேற மறுத்தால் நாம் என்ன செய்வோம் என்பதை முன்கூட்டி தெரிவிப்பது நல்லதல்ல!

தேசிய பாதுகாப்பு அமைச்சர் லலித் அத்துலத் முதலி முன் கண்டவாறு தெரிவித்தார்.

கடந்த சனிக்கிழமை இரத்மலானையில் நடந்த மதவைபவம் ஒன்றில் அமைச்சர் கலந்து கொண்டு பேசினார்.

அப்போது கூட்டத்தில் இருந்து ஒருவர் இந்திய அமைதிப்படை வெளியேற மறுத்தால் என்ன செய்வீர்கள் என்று கேட்டார்.

அதற்கே அமைச்சர் முன்கண்டவாறு பதில் அளித்தார்.

இன்னொருகேள்விக்குப் பதிலளிக்கையில்,

ஜே. வி பி. யினர் சிறிது காலத்துக்கு வன்செயல்களைக் கைவிடுவாராளாயின் அவர்களுடன் பேச்சுக்கள் நடத்த நாம் தயாராக இருக்கின்றோம் என்று அமைச்சர் சொன்னார். (ஒ-எ)

# ஈழத்தமிழர் பிரச்சினையைத் தீர்க்கக் கோரி இ. காங்கிரஸ்

## மாநாட்டுக்குப் பிரேரணை

### தமிழகப் பிரிவினர் முயற்சி

சென்னை, ஏப். 11
ஈழத் தமிழர் பிரச்சினைக்கு உடனடியாகத் தீர்வு காணுவதற்குத் தகுந்த நடவடிக்கை எடுக்க வேண்டும் என காங்கிரஸ் கட்சியை வற்புறுத்தும் பிரேரணை ஒன்றைக் கொண்டு வருவதற்குத் தமிழக இ. காங்கிரஸ் வட்டாரங்கள் சில முயற்சித்து வருகின்றன. ஈழத்தமிழர் பிரச்சினை தீர்க்கப்படாமல் இருப்பது தமது கட்சியின் தேர்தல் பிரசாரத்தை நடத்துவதற்கு சவாலாக இருப்பதாக அந்த வட்டாரங்கள் மேலும் தெரிவித்தன.

எதிர்வரும் 23, 24 ஆம் திகதிகளில் சென்னை மறைமலை நகரில் இ காங்கிரஸ் மாநாடு நடைபெற இருக்கிறது.

இந்த மாநாட்டிலேயே மேற்கண்ட பிரேரணையைக் கொண்டுவர தமிழக இ. காங்கிரஸ்கட்சி முயற்சி மேற்கொண்டு வருகிறது.

இதே வேளை —
சென்னை மறைமலை நகரில் நடைபெற இருக்கும் இ. காங்கிரஸ் மாநாட்டில் நிறைவேற்றப்படும் தீர்மானங்களைத் தயாரிக்க மத்திய அமைச்சர் பி. வி. நரசிம்மராவ் உட்பட 5 பேர் கொண்ட குழு நியமிக்கப்பட்டு உள்ளது

இதுபற்றி அகில இந்திய இ. காங்கிரஸ் பொதுச்செயலாளர் கே. வி பணிக்கர் கூறியிருப்பதாவது:

மாநாட்டில் நிறைவேற்றப்படவிருக்கும் தீர்மானங்களை வடிவமைப்பதற்காக குழு ஒன்று நியமிக்கப்பட்டு உள்ளது.

இந்தக் குழுவில் மத்திய மனித வளத்துறை அமைச்சர் பி. வி, நரசிம்மராவ், மத்திய பிரதேச முதல் அமைச்சர் அர்ஜுன்சிங், ஒரிசா முதல்வர் ஜே. பி பட்நாயக், அகில இந்திய இ. காங்ரஸ் பொருளாளர் சீத்தாராம் கேசரி. இ. காங்கிரஸ் நடாளுமன்றக் குழு உறுப்பினர் தர்பாராசிங் ஆகியோர் இடம் பெற்றுள்ளனர். (ஒ-உ)

## நான்கு தொகுதிகளுக்கும் இடைத் தேர்தல் நடக்கும்

கொழும்பு, ஏப் 12
இரத்தினபுரி, கெக்கிராவ, வெலிமட, கட்டுகம்பளை ஆகிய தொகுதிகளுக்கு இடைத்தேர்தலை நடத்த ஐக்கிய தேசியக் கட்சி தீர்மானித்துள்ளது.

கட்சியின் செயற்குழுக் கூட்டத்தில் இது பற்றிய தீர்மானம் எடுக்கப்பட்டது.

இத்தொகுதிகளைப் பிரதிநிதித்துவப் படுத்திய நான்கு எம். பிக்களும் மாகாண சபைத் தேர்தலில் போட்டியிடுவதற்காக இராஜினாமாச் செய்தனர் என்பது தெரிந்ததே.

இத்தொகுதிகளுக்கு எம் எம்பிக்களை நியமிக்காமல், இடைத் தேர்தல்களை நடத்துவது தீர்மானிக்கப்பட்டிருக்கிறது. [ஒ-எ]

## போதனாவைத்தியசாலை சமயா சமய ஊழியருக்கு மேலதிக கொடுப்பனவு இல்லை!

### அமைச்சு அறிவிப்பு

யாழ்ப்பாணம், ஏப் 12
போதனா வைத்தியசாலைகள் அமைச்சின் கீழ் கடமையாற்றும் சமயா சமய ஊழியர்களுக்கு வழங்கப்பட்டு வரும் விசேட விடுமுறைகளுக்கான மேலதிக கொடுப்பனவுகள் நிறுத்தப்பட்டுள்ளன.

இதனால் பல ஊழியர்கள் பெரும் அதிருப்தி தெரிவித்துள்ளனர்

கடந்த காலங்களில் போயா உட்பட விசேட விடுமுறை தினங்களில் கடமையாற்றிய சமயா [illegible] ஊழியர்களுக்கு மேலதிகமாக அலவன்ஸ் [illegible] சம்பளம் வழங்கப்பட்டு வந்தது.

போதனா வைத்திய சாலைகள் அமைச்சு விடுத்த அறிவித்தலின்படி இந்த மேலதிக சம்பளம் கடந்த ஜனவரி மாதம் முதல் நிறுத்தப் பட்டுள்ளது.

போதனா வைத்திய சாலைகள் அமைச்சின் அறிவித்தல்கள் கடந்த வாரம் அளவில்தான் யாழ் மாவட்டத்துக்குக் கிடைத்தது.

இந்தச் சம்பள வெட்டு காரணமாக ஊழியர் [illegible] அதிருப்தி தெரிவிக்கப்பட்டுள்ளது. (ஒ-10)

## நயினாதீவுக்கு கூடுதல் படகுச்சேவை

யாழ்ப்பாணம், ஏப் 12
நயினாதீவுக்கும் குறிகாட்டுவானுக்கும் இடையே எத்தனை படகுகளும் சேவையில் ஈடுபடலாம்.

இதற்குப் பாதுகாப்பு படையினரின் எந்த வித கட்டுப்பாடும் இருக்க மாட்டாது.

வேலணை உதவி அரச அதிபர் நேற்று திங்கட்கிழமை படகு உரிமையாளர்களை சந்தித்து படகு சேவை சம்பந்தமாக கலந்துரையாடினார். (ஒ-க-10)


**Air Mail Courier Service**
**Jaffna -- Colombo -- Jaffna**

Mack Communication & Travels, Jaffna is operating an AIRMAIL COURIER SERVICE from JAFFNA TO COLOMBO andback. We undertake to carry small parcels and letters to be delivered in Colombo.
We also undertake stamped letters to be posted in Colombo.

For further details, Please enquire:

MACK
Communications & Travels
No. 8, 1st Lane,
Point-Pedro Road, Jaffna.
In Colombo contact:
UPALI TRAVELS LIMITED,
[GSA for Upali Aviation (Pte) Limited]
34, Galle Road, Colombo-3.
Tel: 20465, 29399, 28826.

யாழ் - கொழும்பு
**விமான சேவை**

பலாலிக்கு ரத்மலானைக்கு விசேஷ போக்குவரத்து வசதிகளுடன் ஒழுங்காக நடைபெறுகின்றது.
இன்று வெற்று ஆசனங்கள் உண்டு.
ஏமாற்றத்தைத் தவிர்க்க உடன் ஆசனங்களைப் பதிவு செய்து கொள்ளுங்கள்!
அடுத்த கிழமை 13ஆம் திகதி தவிர்ந்த மற்றைய நாட்களில் வெற்று ஆசனங்களுக்கு
பதிவுகள் உடன் ஏற்றுக்கொள்ளப்படும்.
Film roll Processing & Printing Accepted. Delivery within 3 days. Special discount for Studios and bulk orders.
வெளிநாடுகளுக்கு விமான ரிக்கற், பாஸ்போட் Renewal and Alteration and Bonding, Visa, Indian Visa, Confirmation, Reconfirmation and Cancellation ஒழுங்குகள் செய்து கொடுக்கப்படும்.

MACK
Communications Travels
இல. 8, முதலாம் ஒழுங்கை,
பருத்தித்துறை வீதி, யாழ்ப்பாணம்



அன்பர்கள், நண்பர்கள், ஆதரவாளர்கள் அனைவருக்கும்
**எமது புத்தாண்டு**
நல் வாழ்த்துக்கள்

★ தேனினும் இனிய அருஞ்சுவை நிறைந்தது.
**Merri Gold Toffees**
★ வானவில்லைப் போன்று ஏழு வர்ணங்களிலும் ஏழு சுவை ஊட்டுவதும்
எங்கும் கிடைப்பதும்
MERRI GOLD TOFFEES
வகை வகையான தித்திக்கும்
● அன்னாசி
● ஆரஞ்சு
● லெமன்




BLACK CURRENT, PEANUT MINT STRAWBERRY
ஆகிய ஏழு சுவைகளையும் வழங்குவது
**MERRI GOLD TOFFEES**
இலங்கை தராதர சபையினால் அங்கீகரிக்கப்பட்டது
MERRI GOLD TOFFEES
என்பதை வாடிக்கையாளர்களுக்கு மகிழ்ச்சியுடன் தெரிவிக்கின்றோம்.
★ கையிருப்பாளர்களும் ஏக விநியோகஸ்தர்களும் ★
**Present Enterprises**
(2346)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சான்றுப் பத்திரங்கள் இல்லாத வாகனங்கள்
## தடுத்து வைக்கப்பட்டன

யாழ்ப்பாணம், ஏப் 12

வாகனம் ஓட்டுவதற்கான பூரணத்துவமான சான்றுப் பத்திரங்கள் இல்லாத வாகனங்கள் யாழ். நகரப் பகுதியில் அமைதிப் படையினரால் தடுத்து வைக்கப்பட்டன.

வாகனச் சாரதியிடம் பாஸ், சாரதி லைசென்ஸ் காப்புறுதி பத்திரம் உட்பட எல்லாச் சான்றுப் பத்திரங்களும் உள்ளனவா என்பதை இந்திய அமைதிப் படையினர் ஆராய்ந்தனர்.

அப்போது சான்றுப் பத்திரங்கள் இல்லாத வாகனங்கள் வீதியோரங்களில் தடுத்து வைக்கப்பட்டன.

உரிய சான்றுப் பத்திரங்கள் சமர்ப்பித்ததன் பின் வாகனங்களை எடுத்துச் செல்ல அனுமதித்தனர். (ஒ-10)

# 3 ஆம் தொடர் உணவு முத்திரை
# ஜூன் முதல் வழங்கப்படும்

வேலணை, ஏப் 12

வறுமை நிவாரணத் திட்டத்தின் கீழ் 3ஆவது தொடர் உணவு முத்திரை ஜூன் மாதம் தொடக்கம் வழங்கப்படவுள்ளது.

இந்த முத்திரைகளை வழங்குவதற்கான உணவு, மண்ணெண்ணெய்

### மீளாய்வு வேலை துரிதம்

முத்திரைகள் வைத்திருப்போரின் குடும்பங்களின் வருமான நிலை மீளாய்வு செய்யப்படுகிறது.

இதன் பிரகாரம் உணவு முத்திரைகளை வைத்திருப்போரின் குடும்பங்களின் மாத வருமானத்தில் அதிகரிப்பு காணப்படுமிடத்து அவர்களுடைய உணவு முத்திரைகள் வழங்கப்படமாட்டாது.

குடும்பங்கள் மின்சார வசதியையுடையவையாக இருந்தால் அவர்களுடைய மண்ணெண்ணெய் முத்திரை வழங்கப்படமாட்டாது.

இந்த மீளாய்வுகள் ஏப்ரல் மாதம் 14 ஆம் திகதிக்கு முன்பாக முடிவடைதல் வேண்டும் என சம்பந்தப்பட்ட அமைச்சு சகல உதவி அரசாங்க அதிபர்களுக்கும் சுற்று நிருபம் அனுப்பி உள்ளது. [இ-167)

# அணு சக்தி இயந்திரம்
## புற்று நோய் ஆஸ்பத்திரிக்கு

கொழும்பு, ஏப். 11

மகரகம புற்றுநோய் ஆஸ்பத்திரியில் அணு சக்தி இயந்திரம் ஒன்று நிறுவப்படவிருக்கின்றது.

கழுத்தில் புற்றுநோய் ஏற்படுபவர்களுக்குச் சிகிச்சை அளிக்க இந்த இயந்திரம் பயன்படுத்தப்படும்.

கழுத்துப் பகுதிகளில் புற்று நோய் பெண்களுக்கே அதிகமாக ஏற்படுகின்றது.

தகுந்த சிகிச்சை செய்யாததினால் பெரும்பாலோர் கழுத்துப் புற்று நோய்க்குப் பலியாகி வருகின்றனர்.

இலங்கை அணுசக்தி அதிகார சபைத் தலைவர் டாக்டர் கிரான்வில் தர்மவர்த்தன எடுத்த முயற்சியைத் தொடர்ந்தே ஜப்பான் இந்த இயந்திரத்தை வழங்க முன்வந்துள்ளது.

இதனைப் பொருத்துவதற்காக விரைவில் ஜப்பான் தொழில் நுட்ப நிபுணர்கள் கொழும்பு வருவர். [நு-எ]

## பிறந்ததின வாழ்த்து



### செல்வன் சி. ஸ்ரீபிரதாப்

யாழ்ப்பாணம், 158, நாவலர் வீதியைச் சேர்ந்த பொ. சிவகடாட்சம் அன்னலட்சுமி தம்பதிகளின் செல்வப் புதல்வன் ஸ்ரீபிரதாப் இன்று [12-04-88] தனது முதலாவது பிறந்த தினத்தைக் குதூகலமாகக் கொண்டாடுகின்றார். ஸ்ரீபிரதாப் சகல செல்வமும் பெற்று சிறப்புடன் வாழ, அப்பா, அம்மா, அப்பம்மா பெரியப்பா, மைத்துனன் சித்தப்பா, அத்தைமார், அம்மப்பா, அம்மம்மா, சலூதி மாமா, மாமாமார் சித்தப்பா, சித்திமார் மற்றும் உற்றார் உறவினர் வாழ்த்துகின்றனர்.

# திருகோணமலை
## துறைமுகத் தொழிலாளர் ராஜீவுக்குக் கடிதம்

திருகோணமலை, ஏப் 12

புதிதாக நிறுவப்பட்ட பத்து ஸ்ரீலங்கா இராணுவத்தின முகாம்களையும் மூடி விடும்படி திருகோணமலை துறைமுகத்தைச் சேர்ந்த சுமார் 500 தொழிலாளர்கள் கையொப்பமிட்டு இந்தியப் பிரதமர் திரு. ராஜீவ் காந்திக்கு கடிதம் அனுப்பியுள்ளனர்.

கடந்த காலங்களில் ஸ்ரீலங்கா இராணுவத்தினரால் மேற்கொள்ளப்பட்ட அழிவுகள்' அனர்த்தங்கள் ஆகியனவற்றையும் இந்தக் கடிதத்தில் அவர்கள் சுட்டிக் காட்டியுள்ளனர்.

முக்கியமாக மட்கோவில் அமைந்துள்ள ஸ்ரீலங்கா இராணுவமுகாம் சிப்பாய்களால் துறைமுக ஊழியர்களுக்கு ஏற்பட்டு வரும் அச்சம் அசௌகரியங்களையும் அவர்கள் கடிதத்தில் குறிப்பிட்டுள்ளனர்.

இதே வேளை, திருகோணமலை மாவட்டத்தில் தமிழ்ப் பகுதிகளில் புதிதாக நிறுவப்பட்ட ஸ்ரீலங்கா இராணுவ முகாம்களை அகற்றுமாறு கோரி, சம்பந்தப்பட்ட பகுதிகளில் வாழும் தமிழ் மக்கள் மகஜர்களை இந்திய அமைதிப் படை அதிகாரிகளிடம் ஏற்கனவே சமர்ப்பித்திருந்தனர்.

இச்செய்தி கடந்த 7 ஆம் திகதி உதயனில் தலைப்புச் செய்தியாக வெளியாகி இருந்தது தெரிந்ததே (ஒ-150)

மக்கள் முகம்

## பாடசாலை அபிவிருத்திச் சங்கம்

நெடுங்கேணி ஒதிய மலை அரசினர் தமிழ்க் கலவன் பாடசாலை அபிவிருத்திச் சங்கத்தின் நடப்பு வருட நிர்வாகிகள்:-

தலைவர் திரு. என். பரமானந்தம் (அதிபர்) இணைச் செயலாளர்கள் திரு. க. பேரம்பலம் திரு க. நாகரத்தினம், பொருளாளர் திரு. சு. மாசிலாமணி;

நிர்வாகசபை உறுப்பினர்கள் திரு கா, தெய்வேந்திரம், திரு. சி தேவராசா, திரு. யோகராசா, திரு ச. சாம்பசிவம், திரு சி. செல்வராசா திருமதி ந. விஜயலட்சுமி, திருமதி சி. சரோஜினிதேவி (இ-க-சி)

## திருவாசக முற்றோதல்

சாவகச்சேரி, ஏப் 12

திருவாசகம் ஓதுவதால் தீவினைகள் அகலும் அருள் அலைகள் அகனறு எம்மைச்சூழ்வ தால்தீய அலைகள் அகன்று விடும். கூட்டாகவும் தனித்தும் இல்லங்களில் கூட குடும்பமாகவும் இதனை ஓதலாம்.

ஆத்ம ஜோதி ஆசிரியர் திரு. நா. முத்தையா மட்டுவிலில் இடம் பெற்ற திருவாசக முற்றோதல் நிகழ்ச்சியை ஆரம்பித்து வைத்து உரையாற்றுகையில் இப்படிக் கூறினர்.

அவர் தொடர்ந்து பேசுகையில் திருவாசகத்துக்கு உருகாதார் யாருளர். திருவாசகம் மனிதனல் கூற இறைவனல் எழுதப்பட்ட பெருமையை உடையது என்ருர். (இ-31)

## 2 ஆம் ஆண்டு நினைவஞ்சலி



**திருமதி நாகம்மா கந்தையா**

பிறப்பு: 11- 04 1921 — இறப்பு: 12- 04- 1986

அவனன்றி அணுவும் அசையாது அம்மா. நீங்கள் வந்த வேலை முடித்து போய் விட்டீர்களே. நான் வந்த வேலை இன்னும் முடியவில்லை.

உங்கள் ஆத்மா சாந்தி அடைய எல்லாம் வல்ல இறைவனை வேண்டுகிறோம்.

உங்களை என்றும் மறவாத:

இ. கந்தையா, சேர்ச் லேன், கொக்குவில் மேற்கு — கணவன், பிள்ளைகள். (2315)

# வாழ்க்கைத் திறன் கல்வி: நோக்கம் என்ன?
## பயிற்சி வகுப்பில் உரை

மானிப்பாய், ஏப் 1?

மாணவர்கள் மனநிலையில் மாற்றம் ஏற்பட வேண்டும். மாணவர் சிந்தனையைத் தூண்டவும் கைத்திறனை வளர்க்கவும் எல்லாத் தொழிலிலும் அவன் திறமைபெற வேண்டும் என்ற நோக்கில் ஆரம்பிக்கப்பட்டதுதான் வாழ்க்கைத் திறன் கல்வி. இதற்காக வெளிநாட்டு உதவியுடன் கல்வி அமைச்சு பிரத்தியேகமான பிரிவு ஒன்றை ஏற்படுத்தியுள்ளது. ஒரு மாணவனுக்கு இதற்கென ஆண்டு தோறும் பத்து ரூபாவைச் செலவிட்டு வருகின்றது.

வாழ்க்கைத் திறன் கல்வி ஆசிரியர்களுக்கான நான்கு நாள் சேவைக்காலப் பயிற்சி வகுப்பை ஆரம்பித்து வைத்து உரையாற்றிய யாழ்ப்பாணம் கல்விப் பணிப்பாளர் ஜனப் எம். எம். மன்சூர் இவ்வாறு

( 5ஆம் பக்கம் பார்க்க)

## பிறந்ததின வாழ்த்து



### தேவதாசன் தயாளினி

''பகவான் கடாட்சம்.,

இளவாலை வடக்கு, இளவாலையில் வசிக்கும் தேவதாசன் இந்திரா தம்பதிகளின் செல்வப் புதல்வி தயாளினி தனது 9 ஆவது பிறந்த தினத்தை [14-04-88] வியாழக்கிழமை தனது இல்லத்தில் மிகவும் குதூகலமாகக் கொண்டாடுவார்.

அப்பா, அம்மா, அப்பம்மா மாமா. பெரியப்பா' பெரியம்மா, சித்தி, சித்தப்பா மற்றும் உற்ருர், உறவினர், நண்பர்கள் ஆகியோர் பல்கலைகளும் பெற்றுப் பல்லாண்டு வாழ்கவென்று வாழ்த்துகின்றார்கள்,( 2456)

## பிரயாண ஒழுங்குகள்

### உடனடிவேலை வாய்ப்புக்கள்

- ★ மெக்கானிக்ஸ் — 10 வெற்றிடங்கள்
- ★ ஸ்பிறே பெயின்ரர்ஸ் — 5 வெற்றிடங்கள்
- ★ மேசன் — 10 வெற்றிடங்கள்
- ★ தச்சுத்தொழிலாளர்கள்–10 வெற்றிடங்கள்
- ★ காபறேட்டர் டெக்னிசன்
- ★ லுப்பிறிகேஷன் வல்லுனர்
- ★ அப்கோஸ்டரி வல்லுனர்
- ★ கிளீனர்ஸ்
- ★ காடினேர்ஸ்
- ★ சிவில் எஞ்சினியேர்ஸ்
- ★ வெல்டெர்ஸ்
- ★ அல்மீனியம்லுப்பிறிறேஷன்
- ★ ஆக்கிடெக் அல்லது படவரைஞர்
- ★ பிளம்பேர்ஸ்
- ★ சாரதி / எலக்றிஷன்
- ★ செக்குறிட்டி அலுவலர்

தகுதியுடையோர் நேரில் வரவும் எம்மிடம் இதற்கு முன் தொடர்புகொண்ட அனைவரும் நேரில் வந்து சந்திக்கவும்,

K.LINGAM, காளுவன் சந்தி, சுழிபுரம்.

A.தவச்செல்வம், காளுவன் சந்தி, சுழிபுரம்.

## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி



**ஆழ்வார் கந்தையா** (ஒலிவர்)

தோற்றம்: 7 - 7 - 1929

தேற்றம்: 22 - 4 - 1987

திதி: 12 4 88

அன்பின் தெய்வமே!
எம்மை நீங்கள்
விட்டுப் பிரிந்து
சென்றும் ஓராண்டு
ஓடிமறைந்துவிட்டது!
எமதுஉள்ளம் உங்களை
மறக்கவில்லை
உங்கள் நினைவுகள்
எம்மில் இருந்து
அகல வில்லை
கள்ளமில்லா உம்
பிரிவால்
நித்தமும்
வாடுகிறோம்!
ஆத்மா சாந்தி பெற
பிரார்த்திக்கிறோம்!

வெல்கம் சேல்ஸ் சென்ரர் குடும்பத்தினர், 978, கே. கே. எஸ் வீதி, நாச்சிமார் கோவிலடி. (2780)

## 178ஆம் நினைவுதின அழைப்பிதழ்



### அமரர் செல்லையா சிவமூர்த்தி

இளைப்பாறிய வடபிராந்திய இ போ. ச. (C.T.B.) களஞ்சிய பொறுப்பாளரும் (District Store Keeper) முன்னுல் கடற்படை களஞ்சிய பொறுப்பாளரும் (British Navy Store Keeper

திதி: 12-4-1988 (ஏகாதசி)

தோற்றம்: 6-4-1922 — மறைவு: 18-10-1987

உங்கள் ஆத்மா சாந்தியடைய எங்கள் உயிர் உள்ளவரைக்கும் பிரார்த்திப்போம்.

அன்புடையீர்,

காலஞ்சென்ற எமது குடும்பத் தலைவர் அமரர் செல்லையா சிவமூர்த்தி அவர்களின் வீட்டுக்கிருத்திய கிரியைகள் இன்று செவ்வாய்க்கிழமை 12-4-88 அவரது இல்லத்தில் நடைபெறுவதால் உற்ருர், உறவினர், நண்பர்கள் அனைவரையும் வந்து பங்குபற்றி மதியபோசனத்திலும் கலந்து கொள்ளுமாறு அன்புடன் வேண்டுகின்றோம்.

1. தினேஸ் பேக் கவுஸ் மானிப்பாய் மாக்கற், மானிப்பாய்.
2. சுதுமலை மேற்கு மானிப்பாய்.

இங்ஙனம், தங்கள் நல்வரவை நாடும் சி. சிவமயம், சி. சிவலிங்கம் (சிவசிறி) மருமக்கள், பேரப்பிள்ளைகள். (2497)

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

## உதயசங்கற்பம்

ஒருவன் தனக்குத்தானே நீதிபதியாக இருப்பானாயின் உண்மையில் மகிழ்ச்சியுடன் வாழ்வான்.

— மகாத்மா காந்தி

உதயன்
உண்மை - சுதந்திரம் - நடுநிலைமை
இல:- 293/2 நாவலர் வீதி, யாழ்ப்பாணம். தொலைபேசி 24805 22073
12-04-1988 த.பெ இல:- 23

# காணமற் போவதற்கு தேவை ஒரு வருடம்!

ஒருவர் காணமற்போன ஒரு வருடத்தின் பின்னர் அவர் இறந்துவிட்டார் எனக் கருதப்படுவார். அதாவது காணமற் போனவர் ஒரு வருடத்திற்குள் திரும்பி வராவிடில் அல்லது கண்டுபிடிக்கப்படாவிடில் அவர் இறந்தவராகக் கருதப்படுவார்.

இதற்குச் சட்டரீதியாக வகை செய்யப்பட்டிருக்கிறது. இதுவரை காலமும் காணமற்போன ஒருவர் இறந்துவிட்டதாகக் கருதப்படுவதற்கு ஏழு வருடகால இடைவெளி வழங்கப்பட்டிருந்தது. இப்போது அது ஒரு வருடமாகக் குறைக்கப்பட்டிருக்கிறது.

இலங்கையில் கடந்த சில வருடங்களாக ''காணமற் போவோர்'' எண்ணிக்கை அதிகரித்து வந்தது உலகறிந்த விவகாரம். அப்படிக் காணமற் போவோர் பட்டியலில் தமிழர்களே அதிக எண்ணிக்கையில் இடம்பெறுவதும் வெளிப்படையான விடயம். இதனைச் சர்வதேச மன்னிப்புச்சபை போன்ற ஸ்தாபனங்கள் அம்பலப்படுத்தி வந்ததையும் மறந்து விடலாகாது.

அவ்வாறு காணமற்போன தமிழர்களில் அநேகர் பாதுகாப்புப் படைகளால் விசாரணைக்கென்று அழைத்துச் செல்லப்பட்டவர்கள் அல்லது கொல்லப்பட்ட பின்னர் விவரம் தெரிவிக்கப்படாது மறைக்கப்பட்டவர்கள்.

எனினும் காணமற் போன தமிழர்களுக்குப் பொறுப்பேற்க அரசு மறுத்து வந்தது. சர்வதேச மன்னிப்புச்சபை பொய்யான அத்தாட்சிகள் அல்லது சத்தியக் கடதாசிகளின் அடிப்படையில் தவறான விவரங்களை, புள்ளி விவரங்களை வெளியிட்டு வருவதாக அரசு வாதாடியதும் உண்டு.

ஆனால் தமது கணவன்மாரையும், புத்திரர்களையும், புத்திரிகளையும் பறிகொடுத்த ஆயிரக்கணக்கான தமிழர்களுக்குத்தான் தெரியும் மன்னிப்புச்சபை உண்மை சொல்கிறதா அல்லது அரசு பொய் சொல்கிறதா என்பது!

பொலீஸார் அல்லது பாதுகாப்புப்படையினர் விவரம் தெரிவிக்காமல் விசாரணைக்கென அழைத்துச் சென்றவர்களை நீதிமன்றத்தில் ஆஜர் செய்யுமாறு கோரி ஆட்கொணர்வு வழக்குத் தொடர்வதற்கு சட்ட வாய்ப்பு உண்டு.

பழைய சட்டப்படி ஏழு வருட அவகாசம் இருந்தபோது இரண்டு மூன்று வருடங்களின் பின்னரும் நீதி கேட்க வசதி இருந்தது. ஆனால் இப்போது ஒரு வருட கால எல்லை தாண்டினால் நீதி கேட்கவும் வாய்ப்பு இல்லை.

அதாவது அரசாங்கம் தனது படைகள் கொலை செய்தவர்கள் பற்றிய விவகாரத்தை ஒரு வருட காலத்திற்கு இழுத்தடித்து விட்டால், சம்பந்தப்பட்டவர் சட்டப்படி இறந்து போனவர் ஆகிவிட, அரசும் குற்றம் செய்த படை வீரர்களும் தப்பிக்கொள்ள இடமுண்டு.

எனவே புதிய சட்டத் திருத்தம் இறந்தவரின் உறவினர்களுக்கு நீதியை மறுப்பதற்கு ஒப்பான ஒரு செயலாகும். அது பெரும் அநீதியும், அதர்மமும், அராஜகத்தனமும் ஆகும்,

ஜனநாயகமும், நீதியும் நிலவுவதாகம், பேணப்படுவதாகவும் கூறப்படும் ஒரு நாட்டில், தனிமனிதன் ஒருவனை, அரசாங்க ஏஜெண்டுகளான படைகள் தாம் நினைத்த மாதிரிக் கொலைசெய்துவிட்டு, தீர்த்துக்கட்டிவிட்டு நீதியின் கரத்தில் இருந்து இழுத்தடித்துத் தப்பிக் கொள்வதற்கு புதிய சட்டம் வகை செய்கிறது.

கடந்த சில மாதங்களில் தென்னிலங்கையைச் சேர்ந்த நூற்றுக்கணக்கானவர்களும் ''காணமற் போய்'' விட்டார்கள். ஆகையால் புதிய சட்டத்தின் தாக்கத்தைத் தென்னிலங்கை மக்களும் உணரச் சந்தர்ப்பம் உண்டு.

அரச படைகள் சட்டத்தைத் தமது கைக்குள் எடுத்து வைத்துக்கொண்டு. தமக்கு வேண்டாதவர்களை ''காணமற்போனவர்கள்'' பட்டியலில் சேர்த்து விடுவதற்கும் புதிய சட்டம் வாய்ப்பளிக்கப் போகிறது.

மக்களே தெரிந்துவிட்ட எம். பிக்கள் மக்களையே காணமற்போகச் செய்வதற்குச் சட்டவசதி செய்யும் துரோகமும், விபரீதமும்தான் என்னே!

பயங்கரவாதத் தடைச் சட்டம் போலவே இந்தச் சட்டமும் தர்மிஷ்ட அரசாங்கத்தின் கர்ண கொடூர சட்டங்கள் பட்டியலில் ஒன்றாகி விடுகிறது. என்னே, ஜனநாயகம்! என்னே அராஜகம்! என்னே கொடுமை!

## மே 2 இல் ஆரம்பம்

கொடிகாமம், ஏப்.12 மாதம் 2 ஆம் திகதி இவ் தென்மராட்சி கிழக் கட்கிழமை ஆரம்பமாகும் பாடசாலைகள் மே கும். [இ-5]

---

ஆப்கன் உடன்பாடு கைச்சாத்தாகும் தருணத்தில்

# சோவியத் விமானம் சுட்டு வீழ்த்தப்பட்டது!

## 29 பேர் பலி!!

காபூல், ஏப் 11

ஆப்கானிஸ்தானில் சோவியத் விமானம் ஒன்று கிளர்ச்சிக்காரர்களினால் சுட்டு வீழ்த்தப்பட்டது.

விமானத்தில் இருந்த 29 பேரும் கொல்லப்பட்டனர். அவர்களில் 23 பேர் பயணிகள். ஆறு பேர் விமானச் சிப்பந்திகள்.

சாம் ஏவுகணையைப் பாவித்தே விமானத்தைக் கிளர்ச்சிக்காரர் சுட்டு வீழ்த்தினர் என்று டாஸ் செய்தி ஸ்தாபனம் அறிவித்தது.

ஆப்கன் சமாதான ஒப்பந்தம் ஜெனிவாவில் கைச்சாத்திட இன்னும் சில தினங்கள் இருக்கையில் கிளர்ச்சிக்காரர்கள் இத்தாக்குதலை நடத்தியிருக்கின்றனர்.

எந்த உடன்பாட்டையும் ஏற்கப்போவதில்லை என்று கிளர்ச்சிக்காரர்கள் ஏற்கனவே அறிவித்துவிட்டனர்.

ஆப்கன் – சோவியத் எல்லைப்புறத்தில் இத்தாக்குதல் இடம்பெற்றது.

### குண்டு வெடிப்பு!

கராச்சியில் உள்ள சவூதி எயர்லைன்ஸ் அலுவலகத்துக்கு அருகில் பார்சல் குண்டு ஒன்று வெடித்ததில் மூன்று பேர் காயமடைந்தனர்.

---

காஸா பகுதியில்

# பலஸ்தீனியர்களின் வீடுகளைத் தகர்க்க வேண்டாம்

## இஸ்ரவேல் இராணுவத்துக்கு மேல் நீதிமன்றம் உத்தரவு

ஜெருசலம், ஏப் 11

பலஸ்தீனியர்களின் வீடுகளைத் தகர்க்கவேண்டாம் என்று இஸ்ரவேல் மேல்நீதிமன்றம் உத்தரவிட்டது.

காஸா பகுதியில் யூதப் பெண் ஒருத்தி கொல்லப்பட்டது யாரால் என்ற விஷயத்தில் ஏற்பட்ட சந்தேகத்தைத் தொடர்ந்துதான் நீதிமன்றம் இந்த உத்தரவைப் பிறப்பித்து இருக்கின்றது.

பலஸ்தீனியர்கள்தான் அப்பெண்ணைக் கற்களால் தாக்கிக் கொலை செய்தனர் என்ற சந்தேகத்தைத்தொடர்ந்து இஸ்ரவேல் இராணுவம் பலஸ்தீனியர்களின் வீடுகளைத் தகர்த்து வந்தது.

இதுவரை 14 வீடுகள் தரைமட்டமாக்கப்பட்டன.

யூத குடியேற்றவாசிகளின் துப்பாக்கிப்பிரயோகத்தில் அப்பெண் தற்செயலாகச் சிக்குண்டதினால் மரணமானாள் என்று இப்பொழுது தெரியவந்திருக்கின்றது, (எ)

---

பாகிஸ்தானுக்கு

# அவாக் உளவு விமானத்தை அமெரிக்கா வழங்கும்!

இஸ்லாமபாத், ஏப் 11

பாகிஸ்தானுக்கு தொடர்ந்து இராணுவ உதவிகளை அமெரிக்கா வழங்கும்.

அமெரிக்கப் பாதுகாப்பு அமைச்சர் பிராங்க் கார்லுசி இத்தகவலை செய்தியாளர் மாநாட்டில் தெரிவித்தார்.

பாகிஸ்தான் தலைவர்களுடன் பேச்சுக்களை முடித்துக்கொண்டு புறப்படும் முன்னர் செய்தியாளர் மாநாடு நடந்தது.

ஆப்கானிஸ்தானில் இருந்து சோவியத் துருப்புக்கள் விலக்கிக் கொள்ளப்பட்டாலும் கூட பாகிஸ்தானுக்கு எமது இராணுவ உதவிகள் தொடரும்.

பாகிஸ்தானுக்கு 'அவாக்' ரக உளவு விமானங்களை வழங்க அமெரிக்கா கடமைப் பட்டுள்ளது.

இப்படி அமெரிக்க அமைச்சர் சொன்னார். (எ)

---

11 வருட கால

# எதியோப்பியா சோமாலிய தகராறு முடிவுக்கு வந்தது!

அடிஸ் அபாபா, ஏப் 11

எதியோப்பியாவும் சோமாலியாவும் பதினொரு ஆண்டு கால பிரதேச தகராறுக்கு முற்றுப்புள்ளி வைத்துள்ளன.

இரு நாடுகளும் இது சம்பந்தமான உடன்பாடு ஒன்றைக் கண்டு உள்ளன.

இதைத் தொடர்ந்து ராஜதந்திர உறவுகளை இரண்டு நாடுகளும் புதுப்பிக்க விருக்கின்றன.

எதியோப்பியாவில் உள்ள ஓகடன் பிரதேசத்தில் பெரும் பான்மையாக வாழும் சோமாலி இனத்தவருக்குக் கூடுதல் சுயாட்சி வழங்குவது சம்பந்தமாக இருநாடுகளுக்கும் இடையே பூசல்கள் இருந்து வந்தன.

புதிய சமரச உடன்பாட்டின்படி, தீவிரவாத சக்திகளுக்கு உதவுவது இல்லை என்று இரண்டு நாடுகளும் ஒப்புக்கொண்டன. கைது செய்யப்பட்ட வீரர்களைப் பரிமாற்றம் செய்யவும் உடன்பாடு வழி வகுக்கின்றது. (எ)

---

முகாம்களில் தங்காத அகதிகள்

# பெயர்களைபதிவு செய்யக் கோரிக்கை

தமிழ்நாட்டில் முகாம்களில் தங்கி இருக்காத இலங்கைத் தமிழ் அகதிகள் இம்மாதம் 13ஆம் திகதி பிற்பகல் 4 மணிக்கு முன்னதாக மண்டபம் முகாம் துணை ஆட்சித் தலைவரிடம் தங்கள் பெயர்களை பதிவுசெய்து கொள்ளும்படி கோரப்பட்டுள்ளனர்.

பெயர்களை பதிவுசெய்பவர்கள் எதிர்வரும் வெள்ளிக்கிழமை 'ராமானுஜம்' கப்பல் மூலம் ராமேஸ்வரத்தில் இருந்து காங்கேசன்துறைக்கு அழைத்துவரப்படுவர்.

பயணத் கள் தாவேஜுகள், அகதி அடையாளக் கார்ட்டுகள் மற்றும் பத்திரங்களை அதிகாரிகளிடம் சமர்ப்பிக்கவேண்டும்.

இவர்கள் இலவசமாகக் கப்பலில் அழைத்துச் செல்லப்படுவர் (இ-எ)

# எதியோப்பிய அரசுக்கு செஞ்சிலுவைச் சங்கம் அவசர வேண்டுகோள்!

லண்டன், ஏப் 11

எரித்திரியாவில் நிவாரணப் பணிகளில் ஈடுபடும் வெளிநாட்டு உதவி ஏஜென்சிகளை வெளியேறும்படி விடுக்கப்பட்ட உத்தரவை விலக்கிக் கொள்ளும்படி எதியோப்பிய அரசுக்கு சர்வதேச செஞ்சிலுவைச் சங்கம் அவசர வேண்டுகோள் ஒன்றை விடுத்திருக்கிறது.

எரித்திரியாவில் தனிநாடுகோரும் கிளர்ச்சியாளர்கள் தங்கள் இராணுவ நடவடிக்கைகளைத் தீவிரப்படுத்தியுள்ளனர்.

இதனால் உணவு நிவாரணப் பணிகளை மேற்கொள்ள முடியாதிருப்பதாகக் கூறி அங்கு முகாமிட்டுள்ள வெளிநாட்டு சமூக சேவை அதிகாரிகளை வெளியேறும்படி எதியோப்பிய அரசு உத்தரவிட்டது தெரிந்ததே.

வரட்சி மற்றும் வன்செயல்களினால் எரித்திரியா மற்றும் திக்ரே மாகாணங்களில் 30 லட்சம் பேர் வரை பட்டினியால் அவதிப்படுகின்றனர்.

எதியோப்பிய அரசின் உத்தரவுக்கு மத்தியிலும், அமெரிக்க விமானங்கள் நிவாரண உணவுப் பொதிகளை பாதிக்கப்பட்ட பிரதேசத்தில் போட்டு வருகின்றன என்று அறிவிக்கப்பட்டது.

## சோவியத்தில் ஏவுகணைகள் அழிப்பு!

மாஸ்கோ, ஏப், 11

ஆறு நடுத்தர ஏவுகணைகளை அழித்துவிட்டதாக சோவியத் யூனியன் அறிவித்துள்ளது.

வாஷிங்டனில் கைச்சாத்தான றேகன்-கோர்பச்சேவ் நடுத்தர ஏவுகணைக் குறைப்பு உடன்படிக்கையின்கீழ் இந்த ஏவுகணைகள் கிழக்கு ஜேர்மனியில் இருந்து சோவியத்தினால் அகற்றப்பட்டன.

ஏவுகணை அழிப்பு அமெரிக்க அதிகாரிகளின் முன்னிலையில் இடம்பெற வேண்டும் என்று உடன்படிக்கை கூறுகின்றது [எ]

---

# விமானக் கடத்தல் நாடகம் தொடருகிறது!

நிகோசியா, ஏப் 11

பணயக் கைதிகளாக வைக்கப்பட்டுள்ள பயணிகளை விடுவித்தால் மட்டுமே கடத்தப்பட்ட விமானத்துக்கு எரிபொருள் வழங்கப்படும் என்று சைப்பிரஸ் அரசு அறிவித்தது.

மத்திய கிழக்கு அல்லது பலஸ்தீன அதிகாரிகள் மூலம் கடத்தல்காரர்களுக்கு இத்தகவல் தெரிவிக்கப்பட்டது.

கடத்தப்பட்ட விமானத்துக்கு எரிபொருள் நிரப்பத் தவறின், பணயக்கைதிகள் அனைவரும் கொல்லப்படுவர் என்று கடத்தல்காரர்கள் அறிவித்துள்ளனர்.

நேற்று மாலை 6-30 மணியளவில் [இலங்கை நேரப்படி] இந்த எச்சரிக்கை விடுக்கப்பட்டது.

சைப்பிரஸ் அதிகாரிகள் விமானத்துக்கு எரிபொருள் நிரப்ப மறுத்துவிட்டனர்.

குவைத்துக்கு விமானத்தை எடுத்துச் செல்ல கடத்தல்காரர் திட்டமிட்டிருந்தனர்.

சைப்பிரஸின் மறுப்பைத் தொடர்ந்து, அவர்கள் திட்டத்தைச் செயற்படுத்த முடியவில்லை.

ஒன்றரை மணித்தியாலத்தினுள் எரிபொருள் நிரப்பப்படவேண்டும் என்று கடத்தல்காரர்கள் கோரினர். அக்காலக் கெடு முடிவடைந்துவிட்டது.

இதனிடையில் பிரிட்டனில் இருந்து 35 பேர் கொண்ட கொமாண்டோப் படை சைப்பிரஸ் சென்றது.

மேலிட உத்தரவை எதிர்பார்த்து கொமாண்டோப்படை காத்து நிற்பதாக பி.பி.சி. தெரிவித்தது (எ)

---

# பலாலி விமான நிலையம் சர்வதேச நிலையமாகும்

கொழும்பு, ஏப் 12

பலாலி விமான நிலையம் சர்வதேச விமான நிலையமாக அபிவிருத்தி செய்யப்படவுள்ளது.

இதற்குத் தேவையான உதவிகள் அனைத்தையும் வழங்க இந்திய அரசு முன்வந்து உள்ளது.

விமான நிலைய அபிவிருத்திவேலைகள் விரைவில் ஆரம்பிக்கப்படவுள்ளன.

விமானப் போக்குவரத்து சம்பந்தமான இந்திய, இலங்கை உடன்பாடு கடந்த வாரம் கொழும்பில் கைசாத்தானது தெரிந்ததே.

அதைத் தொடர்ந்தே இது சாத்தியமாகியுள்ளது.

இலங்கை விமான நிலையத் தொழில்நுட்ப அதிகாரிகள், விமான ஓட்டிகளுக்கு பயிற்சி அளிக்கவும் இந்திய அரசு இணங்கியுள்ளது.

## சிங்கப்பூரில் இருந்து கோதுமை மா

கொழும்பு, ஏப் 12

சீனன்குடா பிரிமா மா ஆலையின் உற்பத்தி வீழ்ச்சி அடைந்த காரணத்தினால் சிங்கப்பூரில் இருந்து கோதுமை மா இறக்குமதி செய்யப்படவுள்ளது.

20 ஆயிரம் மெட்ரிக் தொன் மா இறக்குமதி செய்யப்படும் என்று உணவுத் திணைக்களம் தெரிவித்தது.

வன்செயல் காரணமாக பிரிமா மா ஆலையில் உற்பத்தி வீழ்ச்சி அடைந்தது. (இ-எ)

## வேலணையில் பயிற்சி வகுப்பு

அறவழி போராட்டக் குழுவின் சிறுவர் கழகங்களுக்கான பயிற்சி வகுப்பு ஒன்று அண்மையில் நடைபெற்றது.

கருத்தரங்கிற்கு அறவழிப் போராட்டக் குழுத் தலைவர் திரு வி. எஸ் துரைராஜா அறவழிப் போராட்டக் குழுவைச் சேர்ந்த திரு. கே. ஜீவதாஸ், திரு. இ. சற்குணநாதன் போன்றோர் கலந்து கொண்டு உரையாற்றினர்கள். (இ-167)

---

## சமய சந்நிதிகளில்

### நாளை ரதோற்சவம்

யாழ்ப்பாணம், ஏப் 12

அச்சுவேலி ஸ்ரீ நடராஜ விரகத்தி விநாயகர் ஆலய தேர்த்திருவிழா நாளை 13 ஆம் திகதி நடைபெறும்.

காலை 8. 15 மணியளவில் வசந்த மண்டப பூஜையாகி 9 மணிக்கு விநாயகப் பெருமான் ரதத்தில் ஆரோகணிப்பார். மறுநாள் தீர்த்த விழா காலை 10 மணிக்கு நடைபெறும்.

கிரியைகள் யாவும் கதிரேசன் ஆலய பிரதம குரு நாராயணக் குருக்கள் தலைமையில் நடைபெறும். [ஒ]

---



பொய்யாமொழி

குறள்

இன்பம் விழையான் இடும்பை இயல்பென்பான்
துன்பம் உறுதல் இலன்.

பொருள்

இன்பமானதை விரும்பாதவனாய்த் துன்பம் இயற்கையானது என்று தெளிந்திருப்பவன் துன்பம் அடைவதில்லை.

---

# பீட்டர் கெனமன் அன்று கையில் ஏந்திய ரோகண விஜேவீரா!

கொழும்பு ஏப். 11.

ரோகண விஜேவீராவுக்கு பீட்டர் கெனமனுக்கும் உள்ள தொடர்பு என்ன?

பல வருடங்களுக்கு முன் நடந்த அந்தச் சம்பவத்தை நினைவு கூர்ந்த உணர்ச்சியுடன் விவரித்தார் திரு கெனமன்.

கம்யூனிஸ்ட் கட்சித் தலைவர் பீட்டர் கெனமன் கடந்த வெள்ளிக்கிழமை கொழும்பு நகர மண்டபத்தில் நடந்த டாக்டர் விக்ரமசிங்காவின் 87 ஆவது பிறந்த தின விழாவில் பேசினார்.

அவர் சொன்னதாவது அக்குரஸ்ஸவில் டாக்டர் விக்ரமசிங்காவின் மருத்துவ மனைக்கு பல ஆண்டுகளுக்கு முன்னர் சென்றிருந்தேன்.

அந்த நேரம் ஒரு பெண் உயிருக்கு மன்றாடிக் கொண்டிருந்த கைக்குழந்தை ஒன்றை மருத்துவ மனைக்குக் கொண்டு வந்தார்.

உடனடியாக அவர் மருந்து கொடுத்தார். குழந்தை சுகமடைந்தது.

"1971இல் யார் இந்த ரோஹண விஜேவீர?" என்று டாக்டர் விக்ரமசிங்காவைக் கேட்டேன்

அப்போது ஜே வி பி. கிளர்ச்சி உச்சக் கட்டத்தில் இருந்தது

''அன்று நீர் கையில் ஏந்திய அந்தக் குழந்தைதான் ரோஹண விஜேவீர'– என்று டாக்டர் விக்ரமசிங்கா சொன்னார்

இதே ரோஹண விஜேவீரா தலைமையிலான ஜே வி. பி அண்மையில் 4 கம்யூனிஸ்டடுக்களை கொலை செய்தது; இன்னும் நால்வரைக் கொல்ல முயற்சித்தது

அந்தக் குழந்தையைக் கையில் அன்று ஏந்தியவரின் உணர்வு இச்சூழ்நிலையில் எப்படி இருக்கும்''— உணர்ச்சி வசப்பட்ட நிலையில் திரு. கெனமன் இப்படிக் கேட்டார். [ஒ-எ]

---

## வாழ்க்கை- - -

(4ஆம் பக்க தொடர்ச்சி)

கூறினார்.

யாழ்ப்பாணம் கனகரத்தினம் மத்திய மகா வித்தியாலயத்தில் இப்பயிற்சி வகுப்பு நடைபெற்றது.

யாழ கல்வித் திணைக்கள தொழில் நுட்பக் கல்வி அதிகாரி திரு. ச. சுப்பிரமணியம் தலைமை வகித்து வரவேற்புரை நிகழ்த்தினார்.

பிரதம கல்வி அதிகாரி திரு கந்தசாமி பேசுகையில் ஆசிரியர்கள் பாடவிடயத்தைச் சரியாகத் திட்டமிட்டல் இலகுவில் சற்றல முயற்சிகளை நடைமுறைபடுத்தலாம என்றார்.

கல்வி அதிகாரி திரு. சி. புலேந்திரன் சேவைக்காலப் பயிற்சியின் முக்கியத்துவம், பண்பாடு பற்றி எடுத்துரைத்தார்.

டருத்தித்துறை கோட்டக்கல்வி அதிகாரியும், பிரதம கல்வி அதிகாரியுமான செல்வி திரிபதப்பி இரண்டாம் நாள் நிகழ்வில் கலந்து கொண்டு செயற்பாடுகள்பற்றி விளக்கம் அளித்தார்.

கனகரத்தினம் மத்திய மகாவித்தியாலய அதிபர் திரு. இராமலிங்கமும் உரையாற்றினார்.

பயிற்சியில் கலந்து கொண்ட ஆசிரியர்களுக்கு சான்றிதழ்கள் வழங்கப்பட்டன. [இ-90]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Computer Course
எல்லையற்ற Practicals IBM COMPUTER உட்பட பலவகை COMPUTERகளில் வழங்கப்படுகிறது
IDP
யாழ்நகரில்!
★ IDP - C/o BOND INSTITUTE
Stanley Road,
கரவெட்டியில்!
★ IDP - C/o MODERN EDUCATION CENTRE.

# உதயன்

12-04-1988 செவ்வாய்க்கிழமை

கொம்பியூட்டர் பயிற்சி
DIPLOMA IN DATA PROCESSING & COMPUTER PROGRAMMING
ஆரம்பம்: 23 - 04 - 1988
at IDP
துர்க்காபுரம் - K.K.S. ROAD - தெல்லிப்பளை

நீத்தார் பட்டியல்

## திருமதி. இராசதுரை சிவபாக்கியம்

இல 50 சங்கிலியன் வீதி, நல்லூரைச் சேர்ந்த காலஞ்சென்ற திரு. இராசதுரையின் அன்பு மனைவி திருமதி இராசதுரை சிவபாக்கியம் 9-4 88ல் காலமாகி விட்டார். அன்னார் சற்குணலிங்கம் [எஞ்சினியர்] சாந்தலிங்கம் [சிவபாக்கியம் ஸ்ரோஸ்] ஆகியோரின் அருமைத் தாயாரும், திருமதிகள் சற்குணலிங்கம் ரஞ்சினி சாந்தலிங்கம் விக்கினேஸ்வரி [ருகினி] ஆகியோரின் அன்பு மாமியாரும் இ. இராசலிங்கம் [மக்கள் வங்கி யாழ்ப்பாணம்] திருமதி சுந்தரலிங்கம் மகேஸ்வரி [தாவடி] ஆகியோரின் சிறிய தாயாரும் வி. துரைராசாவின் அன்புச் சகோதரியுமாவார்.

ஈமைக் கிரியைகள் அன்னாரது இல்லத்தில் இன்று செவ்வாய்க்கிழமை காலை 9.00 மணிக்கு நடைபெற்று தகனக்கிரியைகளுக்காக செம்மணி மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இவ்வறிவித்தலை உற்றார், உறவினர் நண்பர்கள் ஏற்றுக் கொள்ளுமாறு வேண்டுகிறோம்.

தகவல்:
இ. சாந்தலிங்கம்
இல. 50, சங்கிலியன் வீதி,
நல்லூர்.
[2791]

## மு. ஈஸ்வரபாதம்

சட்டத்தரணி
பருத்தித்துறை

திரு மு ஈஸ்வரபாதம் காலமானார். ஈமக்கிரியைகள் இன்று செவ்வாய்க்கிழமை புலோலி கிழக்கு பருத்தித்துறையில் நடைபெறும். உறவினர்கள், நண்பர்கள் இவ்வறிவித்தலை ஏற்றுக்கொள்ளவும்.

நன்றி (2798)

## ஆறுமுகம் சோமசுந்தரம்

ஆறுமுகம் சோமசுந்தரம் 11-4-88-ல் காலமானார் இவர் காலஞ்சென்ற பாக்கியத்தின் அன்புக் கணவரும், காலஞ்சென்ற பரமசாமி, கலாநிதி கந்தையா (யாழ் பல்கலைக் கழகம்), இராமசாமி (அரசினர் வைத்தியசாலை கோண்டாவில்), சுப்பிரமணியம் ஆகியோரின் தந்தை ஆவார். அன்னாரின் ஈமக் கிரியைகள் 12-4-88 இன்று 7, குருசேற்லேன் கச்சேரி நல்லூர் வீதியில் உள்ள அன்னாரின் இல்லத்தில் இருந்து காலை 10 மணிக்கு தகனக் கிரியைக்காக அரியாலை சித்துப்பாத்தி மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும், இவ்வறிவித்தலை உற்றார். உறவினர், நண்பர்களுக்கு அறியத் தருகிறோம்

[2797] தகவல்: குடும்பத்தினர்

## திருமதி
## முத்தம்மா குலசேகரம்பிள்ளை

வேலணை கிழக்கைச் சேர்ந்த திருமதி முத்தம்மா குலசேகரம்பிள்ளை 10 - 04 - 88 ஞாயிற்றுக்கிழமை அன்று காலமானார். இவர் காலஞ் சென்ற குலசேகரம்பிள்ளை (ஐயாத்துரை) அவர்களின் அன்பு மனைவியும் சிவநாயகி, நவமணி, தனநாயகம் (தினேஷ் புத்தகசாலை யாழ்ப்பாணம்), பாலகிருஸ்ணன் (Rural Developing Officer), தனபாலசிங்கம் (ஆசிரியர்) ஆகியோரின் அன்புத் தாயாரும், குமாரசாமி (வர்த்தகர்), மகாலிங்கசிவம், நாகேஸ்வரி, உமாராணி (கூட்டுறவுப்பரிசோதகர்) சிவரஞ்சிதம் ஆகியோரின் அன்பு மாமியாரும், நளாயினி, உமாதேவி, பிரபாகரன், சந்திரிக்கா, தர்சன், சுதர்சன், செந்தூரன் நர்மதா, காயத்திரி, திருவொளி பவன், யாழினி ஆகியோரின் அன்புப்பேத்தியுமாவார்.

அன்னாரின் ஈமக்கிரியைகள் 11-04-88 திங்கட்கிழமை வேலணையில் நடைபெற்றது. இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
(2508) கு தனபாலசிங்கம்

## விசேட ஜீ. சி ஈ. பரீட்சை - - -

[1ம் பக்கத் தொடர்ச்சி]
டது.

அதைத் தொடர்ந்து மாணவர்கள், ஆசிரியர்கள் அதிபர்கள் பெற்றோர் ஆகிய சகல தரப்பினரும் விசேட பரீட்சை நடத்தப்பட வேண்டும். என வலியுறுத்தி அகிம்சைப் போராட்டங்களையும் நடத்தினர்.

எனினும் பரீட்சை நடத்துவது சம்பந்தமாக கொழும்பில் உயர் மட்டத்தில் ஏனோதானோ என்ற நிலை இருந்தது கடந்த சிலவாரங்களின் முன் வடமாநிலக் கல்விப் பணிப்பாளர் தலைமையிலான குழுவொன்று கல்வி அமைச்சரைச் சந்தித்தபோதே சிறிது திருப்பம் ஏற்பட்டது

ஆனாலும் பரீட்சை சம்பந்தமான இறுதி முடிவு எடுக்கப்படவில்லை நேற்றைய தினமே நீண்ட காலமாக எதிர்பார்க்கப்பட்ட முடிவு உத்தியோகபூர்வமாக அறிவிக்கப்பட்டது

யாழ்ப்பாணம் தவிர்ந்த ஏனைய மாவட்டங்களில் (கிளிநொச்சி, முல்லைத்தீவு) கடைப்பட்ட பரீட்சையும் ஜூலையில் நடத்தப்படுமா என்பது குறித்து அறிவிக்கப்படவில்லை.

பெரும்பாலும் தடைப்பட்ட வடமாகாணம் முழுவதும் இப்பரீட்சை ஒரே நேரத்தில் நடத்தப்படும் என தாம் நம்புவதாக சம்பந்தப்பட்ட உயர் அதிகாரி ஒருவர் உதயனுக்குத் தெரிவித்தார்

கிளிநொச்சி, முல்லைத்தீவு மாவட்டங்களின் கல்விப்பணிப்பாளர் திரு ஆர் சுந்தரலிங்கம் யாழ் மாவட்டத்திற்குப் பரீட்சை நடத்தப்பட்டால் தடைப்பட்ட ஏனைய இடங்களுக்கும் அது நடத்தப்படவேண்டும் என கல்வி அமைச்சரிடம் முன்னர் கேட்டிருந்ததும் குறிப்பிடத்தக்கது. (அ-க)

## திருவாதவூரர் தம்பிப்பிள்ளை

திருவாதவூரர் தம்பிப்பிள்ளை அவர்கள் நேற்றுக் காலமாகி விட்டார் (முன்னாள் வட பிராந்திய முகாமையாளர், வக்கர் அன்சன்ஸ் கொம்பனி லிமிட்டெட்) இவர் காலஞ்சென்றதிரு திருமதி தம்பிப்பிள்ளை (சுதுமலை) தம்பதிகளின் புதல்வனும், காலஞ் சென்ற திரு. திருமதி அருள்நந்தி அவர்களின் மருமகனும், மணியின் அன்புக் கணவருமாவார்.

அன்னாரின் ஈமக்கிரியைகள் இன்று பிற்பகல் 4 மணிக்கு பருத்தித்துறையில் நடைபெறும்.

தகவல்: சுகுருமார் (இலங்கை வங்கி யாழ்.
கென்னமன் (வர்த்தக வங்கி, கொழும்பு.
'ரெய்தலன் காவல்'
கடற்கரை வீதி, பருத்தித்துறை. (2799)

## பணய---

(1ஆம்பக்க தொடர்ச்சி)
னர்களான இரண்டு பெண்களும் ஒரு ஆணும் உள்ளனர்

17 ஷிபா திரவாவிகளை குவைத் விடுவிக்காத பட்சத்தில் அந்த மூவரும் கொல்லப்படுவர் என்று கடத்தல்காரர்கள் மீண்டும் எச்சரித்தனர்.

இந்த எச்சரிக்கையை குவைத் அரசு அசட்டை செய்துவிட்டது.

இதுவரை இரண்டு பணயக் கைதிகள் கொல்லப்பட்டிருக்கின்றனர்.

(முன்னர் வந்த செய்தி 5 ஆம் பக்கத்தில்,)
(ஒ-எ)

## திருமலை--.

(1ம்பக்கத் தொடர்ச்சி]
பாடு செய்யப்படும்—

வடமராட்சியில் உள்ள திருமலை அகதிகளைத் தொடர்ந்து, குடாநாட்டின் ஏனைய இடங்களில் தங்கியிருக்கக் கூடியவர்களையும் அவர்களது சொந்த இடங்களுக்கு அழைத்துச் செல்ல ஏற்பாடு செய்யப்படும் என்றும்— அந்தப் பத்திரிகைக் குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது (அ)

## முட்டுக்கட்டை..

(1ம் பக்கத் தொடர்ச்சி)
வுக்கு வழங்கியுள்ளபோதிலும் அவற்றைக் காற்றில் பறக்க விட்டுவிட்டது.

அரசியல் அமைப்புக்குக் கொண்டுவரப்பட்ட 13 ஆவது திருத்தம் ஒப்பந்தத்தில் குறிப்பிடப்பட்ட முக்கிய ஷரத்துக்கள் பலவற்றைக் கொண்டிருக்கவில்லை குறைந்த பட்சம் குடியேற்றங்களைக்கூடத் தடுக்கமுடியாமற்போய்விட்டது.

—இப்படி அவர் கூறினார்.

ஏற்கனவே இலங்கை அரசுக்கும், தமிழீழ விடுதலைப் புலிகளுக்குமிடையில் நடுவராகத் தான் செயற்பட்டு, இனப்பிரச்சினை விடயத்தில் தீர்வு காண முயற்சித்ததை ஒப்புக்கொண்ட திரு குமார் பொன்னம்பலம் அந்த முயற்சிகள் தோல்வியில் முடிந்தன என்றும் கூறினார்.

தற்போதைய சூழ்நிலையில் வடக்கு-கிழக்கு இணைந்த, முழு அதிகாரங்கள் கொண்ட ஒரு அமைப்புத்தான் தமிழர்களின் அபிலாஷைகளைப் பூர்த்தி செய்யக்கூடியதாக இருக்கும் என்றும், சமாதானத்துக்காக எத்தரப்பிலும் மேற்கொள்ளப்படும் நடவடிக்கைகளுக்குத் தமது பூரண ஒத்துழைப்பு என்றும் உண்டு என்றும் அவர் உதயனுக்குத் தெரிவித்தார். (இ-3)

புதுவருட நல்வாழ்த்துக்கள் !
எங்கும் மங்களம் பொலிக !

# லங்கா அசோக் லேலன்ட்

வடமாகாண ஏக விநியோகஸ்தர்கள்

லங்கா அசோக் லேலன்ட் பாவனையாளர்களுக்குத் தரும்

ஓர் நற்செய்தி !



● லங்கா அசோக் லேலன்ட் சிற்று (30 ஆசனங்கள்) முழு அளவு உயரமான பஸ்களும்

● லங்கா அசோக் லேலன்ட் லொறி செஸிகளும்




மற்றும் மேற்குறிப்பிட்ட வாகனங்களுக்கான உதிரிப்பாகங்களும்

● வில்லுத்தகடு தனியாகவும், செற்றுகளாகவும் - (ஒரிஜினல் LEY PARTS)

Leyparts



எங்களிடம் பெற்றுக் கொள்ளலாம்.

லங்கா அசோக் லேலன்ட் சிற்று பஸ்களுக்கும், லொறி செஸிகளுக்கும் உடன் தொடர்பு கொள்ளவும்

வடமாகாண ஏக விநியோகஸ்தர்கள்:

# பிள்ளையார் ஸ்ரோஸ்

31, மானிப்பாய் வீதி,
யாழ்ப்பாணம்.

இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிகேஷன்ஸ்(பிறைவேற்) லிமிட்டெட் ... வீதி, 392/3, இலக்கத்தில் உள்ள அவர்களது அச்சகத்தில்- 1204-1988ல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.
Printed and Published by New Uthayan Publications (Pvt) Ltd. 392/3 Navalar Road, Jaffna on Tuesday, 12th April 1988

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org